பக்கங்கள்: 16
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆடி 23 புதன்கிழமை 08.08.2018 | கதிர் 275

இனி இது ரகசியம் அல்ல!

யுத்தத்தில் முதல் பலிக்கடா 'உண்மை' என்பார்கள். யுத்தக் களேபரத்தில் முதலில் சாவது 'உண்மை'தான். பொய்மைதான் தப்பிப்பிழைக்கும்.

இங்கு, யுத்தம் முடிந்த பின்னரும் அதுதான் நிலைமை போல. உயிரிழந்த 'உண்மை' மீண்டும் பக்கம் 03

# மறைந்தார் கலைஞர் கருணாநிதி




## பெரும் சோகத்தில் மூழ்கியது தமிழகம்

சென்னை, ஓக.08

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் தமிழகத்தின் முன்னாள் முதல்வருமான மு.கருணாநிதி தனது 95 ஆவது வயதில் உடல்நலக் குறைவால் சென்னையில் நேற்று மாலை காலமானார்.

கருணாநிதியின் மறைவினால் மக்கள் பெரும் சோகமும் அதிர்ச்சியும் அடைந்துள்ளனர். தமிழகமே பெரும் சோகத்தில் மூழ்கியுள்ளது.

திராவிட இயக்கத் தலைவர்களின் முதுபெரும் தலைவரும், தமிழகத்தின் தன்னிகரில்லாத அரசியல் தலைவரும், தமிழகத்தின் முதல்வராக 6 முறை பதவி வகித்தவருமான முத்தமிழ் அறிஞர் மு. கருணாநிதியின் உயிர் நேற்று மாலை 6.10 மணியளவில் பிரிந்தது என அதிகாரபூர்வ பக்கம் 14



# தனது திட்டவட்ட முடிவை விக்கி தாமதமின்றி பகிரங்கமாக்கட்டும்

## வலியுறுத்துகிறார் கஜேந்திரகுமார்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 08

வடக்கு மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் எமது கட்சியில் இணையவேண்டும் அல்லது புதிய கட்சியை உருவாக்கி எம்முடன் இணைந்து செயற்பட முன்வரவேண்டும். அப்படி அவர் எங்களுடன் இணையமுடியாதெனில் அதனைக் காலம் தாழ்த்தாது பகிரங்கமாகக் கூறவேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். பக்கம் 14

## சர்வதேச விசாரணைக்கு கூட்டமைப்பினரே தடை

### சாடுகிறார் கஜேந்திரகுமார்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக.08

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும் எனத் தமிழர் தரப்பு கோருகின்ற போதும் அதனைத் தடுக்கும் வேலைகளையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புசெய்துவருகின்றது. பக்கம் 14



இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள சுவிஸ் நீதியமைச்சர் சிமொனெட்டா சொமருகா அம்மையார் நேற்று திருமலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். (ஜ)

## மணிவண்ணனுக்கு எதிரான வழக்கு கொழும்பில் தொடரப்பட்டமை ஏன்?

### உள்நோக்கம் உண்டா என கஜேந்திரகுமார் கேள்வி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக.08

யாழ். மாநகரசபை உறுப்பினர் மணிவண்ணனுக்கு எதிரான வழக்கை 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் யாழ்ப்பாணத்தில் தொடரச் சந்தப்பம் இருந்தும் அதனைக் கொழும்பில் பக்கம் 14

## 1760 துப்பாக்கி ரவைகள் வவுனியாவில் சிக்கின!



வவுனியா, ஓக.08

வவுனியா மூனாமடுவிலுள்ள தனியார் காணி ஒன்றிலிருந்து 1760 துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன என வவுனியா குற்றத்தடுப்புப் பொலி பக்கம் 03

## ஞானசார தேரர் திடீர் சுகவீனம்

கொழும்பு, ஓக.08

பொது பலசேனா அமைப்பின் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர், திடீர் சுகவீனம் காரண பக்கம் 03

## எதிர்க்கட்சித் தலைவர் பதவி: இறுதி முடிவு இன்று அறிவிப்பு

கொழும்பு, ஓக.08

எதிர்க்கட்சித் தலைவர் தொடர்பான அறிவிப்பு இன்றைய நாடாளுமன்ற அமர்வில் வெளியிடப்படும் எனக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் பக்கம் 14

## 27 இலங்கை அகதிகள் நேற்று நாடு திரும்பினர்

கொழும்பு, ஓக.08

இந்தியாவில் இருந்து 27 இலங்கை அகதிகள் விமானம் மூலம் நேற்று நாடு திரும்பியுள்ளனர்.

கடந்த யுத்த காலத்தில் இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு பக்கம் 03

## வடக்கு கல்வி அமைச்சரிடம் ஆறு மணி நேரம் விசாரணை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக.08

தேசியக் கொடி ஏற்ற மறுத்தமை தொடர்பில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரன் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் நேற்று ஆறு மணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் தேசியக் கொடியை ஏற்ற மறுத்தார் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சர் மீது குற்றச்சாட்டு முன் வைக்கப் பக்கம் 03

## உயர்மட்டக் கூட்டத்தை இன்று முல்லை மீனவர் புறக்கணிப்பர்

முல்லைத்தீவு, ஓக.08

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் இன்று புதன்கிழமை எதிர்க்கட்சித் பக்கம் 14

## வடக்கு–கிழக்கில் பலமான காற்று

வடக்கு – கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பாகங்களில் நேற்று பக்கம் 14

# எம்.பிக்களின் கொடுப்பனவு அதிகரிப்பு தொடர்பில் எதுவித யோசனையும் சமர்ப்பிக்கப்படவில்லை!

நாடாளுமன்ற அங்கத்தவர்களின் கொடுப்பனவு அதிகரிப்பது பற்றி எதுவித யோசனையும் தமக்கோ, அமைச்சரவைக்கோ சமர்ப்பிக்கப்படவில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களது அலுவலக செலவுகள் அதிகரித்துள்ளன.

இதனைச் சமாளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென சில மாதங்களுக்கு முன்னர் கூடிய அரசியல் கட்சித் தலைவர்களது கூட்டத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அந்தக் கோரிக்கை தொடர்பில் நியாயமான விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டால், தாம் திறைசேரியுடன் பேசி தீர்மானத்தை எடுக்கப் போவதாக தான் அறிவித்தேன் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.



பிரதமர் அறிவிப்பு

அதற்குப்பின்னர் பலதடவைகள் கட்சித் தலைவர்களைச் சந்தித்த போதும், கொடுப்பனவு அதிகரிப்புப் பற்றி கருத்துக்கள் பரிமாறப்படவில்லை என பிரதமர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் குழுவை நேற்று அலரிமாளிகையில் சந்தித்த வேளையில் அவர் இந்தக் கருத்துக் களைக் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களது கொடுப்பனவு அதிகரிக்கப்பட உள்ளதாக பத்திரிகைகளில் சமீபத்தில் வெளியான செய்திகள் பற்றி பிரதமர் கருத்து வெளியிட்டார்.

கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கு அமைச்சரவைப் பத்திரத்தை தாக்கல் செய்து, அதற்கு நாடாளுமன்றத்திலும் அங்கீகாரம் பெற வேண்டும். அத்தகைய எதுவும் நடக்கவில்லை என பிரதமர் மேலும் குறிப்பிட்டார்.

# ரயில் விபத்து; 4 ஊழியர் பணி நீக்கம்

கொழும்பு, ஓக. 08

கொழும்பு கோட்டையிலிருந்து கண்டி நோக்கி புறப்பட்ட செங்கடகள மெனிக்கே ரயில் மீது மோதிய கொழும்பு கோட்டையிலிருந்து ரம்புக்கனை வரை சென்ற கடுகதி ரயிலில் சேவையாற்றிய 4 பேர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற ரயில் விபத்து தொடர்பிலேயே, ரயில்வே திணைக்களம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

அதன்படி, ரம்புக்கனை சென்ற ரயில் சாரதி, சாரதி உதவியாளர், பிரதான கட்டுப்பாட்டாளர் மற்றும் உப கட்டுப்பாட்டாளர் ஆகியோரே இவ்வாறு பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

செங்கடகல மெனிக்கே ரயில் பணலிய பகுதியில் சமிக்ஞை இன்றி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேளையில் பின்னால் சென்ற ரம்புக்கனை ரயில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதனால் 32 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பாதாள உலக கும்பலின் உறுப்பினர் கைது!

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய பாதாள குழு உறுப்பினர் ஒருவர் கொலன்னாவ பகுதியில் வாள் ஒன்றுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹெவா தந்ரகே சிசிர குமார எனப்படும் பொடி விஜே நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் வெல்லம்பிட்டிய பொலிஸாரிடம் 31.5 அங்குல வாள் ஒன்றுடன் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நபர் கொலைச் சம்பவம் ஒன்று தொடர்பில் 12 வருட சிறைவாசம் அனுபவித்துள்ளதுடன், 2001ஆம் ஆண்டில் கைக்குண்டு ஒன்றுடன் கைதானவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பிரதான ரயில் பாதையில் இடம்பெற்ற விபத்து பற்றி விரிவான விசாரணை!

## அமைச்சர் நிமல் சிறிபால பணிப்புரை



ரம்புக்கனை பொல்கஹவெல பிரதேசங்களுக்கு இடையில் அமைந்துள்ள பனலிய பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்ற ரயில் விபத்து பற்றி விரிவான விசாரணை நடத்துமாறு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா ரயில்வே பொதுமுகாமையாளருக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

கொழும்பு கோட்டையிலிருந்து நேற்று முன்தினம் மாலை 4.30க்கு கண்டி நோக்கி பயணித்த கடுகதி ரயிலின் பின்னால் ரம்புக்கனை நோக்கிச் சென்ற பவர்செட் ரயில் மோதியமையால் இந்த விபத்து ஏற்பட்டது.

விபத்தை ஏற்படுத்திய ரயில் சாரதியின் சேவையை தற்காலிகமாக இடைநிறுத்தி விசாரணை நடத்துமாறு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

ரயில்வே பொது முகாமையாளர் தலைமையில் மூன்று பேர் அடங்கிய விசாரணைக் குழு விசாரணை நடத்துவது அவசியமாகும். விபத்துடன் தொடர்புபட்டவர்களுக்கு எதிராக பாரபட்சம் இன்றி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா வலியுறுத்தியுள்ளார்.

ரயில் சேவை தொடர்பாக மக்களுக்கு மத்தியில் கட்டியெழுப்பப்பட்டுள்ள நம்பிக்கை இவ்வாறான சம்பவங்கள் மூலம் சீர்குலையும் என அமைச்சர் கூறினார்.

இது கவலைக்குரிய விடயமாகும். ஆயிரக்கணக்கான பயணிகளின் உயிர் பற்றி ரயில் சாரதிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

# 5 பவுண் திருட்டு நகையுடன் வவுனியாவில் ஒருவர் கைது

வவுனியா – மெனிக்பாம் பகுதியை சேர்ந்த நபரொருவர் 5 பவுண் திருட்டு நகையுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் என தெரியவருகிறது.

சந்தேகநபர் தொடர்பில் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே 30 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் பண்டாரிக்குளம், இராசேந்திரன்குளம், தவசிகுளம் போன்ற பகுதிகளுக்கு மோட்டார்சைக்கிளில் சென்று தனிமையில் செல்லும் பெண்களின் சங்கிலியை அறுத்துள்ளார் என ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் கைப்பற்றப்பட்ட 5 பவுண் தங்க நகைகள் மற்றும் சந்தேகநபரை நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தனியார் மருத்துவ சேவையில் ஈடுபடும் வைத்தியர்களுக்கான வரி குறைப்பு!

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

தனியார் மருத் துவ சேவையில் ஈடு படும் வைத்தியர்களுக்கான வரியை குறைத்துள்ளோம் என அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

தனியார் மருத் துவ சேவைகளை வழங்கும் வைத்தியர்களிடம் இருந்து இதற்கு முன் 12 வீத வரி அறவிடப்பட்டிருந்தது. எனினும் இந்த வருட ஆரம்பம் தொடக்கம் அந்த வரி 24 வீதமாக அதிகரிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் வரியை இடைநிறுத்துமாறும், முன்னைய வரியை மீண்டும் நடைமுறைப்படுத்துமாறும் மருத்துவர்கள் சங்கம் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்து வந்தது.

இதன் காரணமாக தனியார் மருத்துவ சேவைக்கான வரியை 15 வீதமாக குறைத்துள்ளோம் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன அறிவித்துள்ளார்.

மருத்துவர்களினால் பொதுமக்களுக்கு ஆற்றப்படும் சேவைகளை கருத்தில் கொண்டு இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மாநகர சபையை அபிவிருத்தி செய்வதற்கு 1000 நாள் அபிவிருத்தி திட்ட முன்மொழிவு

மட்டக்களப்பு மாநகர சபையினை 100 மடங்கு அபிவிருத்தி செய்வதற்கான 1000 நாள் அபிவிருத்தித்திட்ட முன்மொழிவு நிகழ்வு மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தியாகராஜா சரவணபவன் தலைமையில் நடைபெற்றது.

மட்டக்களப்புக்கு சென்ற ஜப்பான் நாட்டு தூதுவர் கெனிச்சி சுகுனுமா தலைமையிலான குழுவினருக்கு இந்த முன்மொழிவு நேற்றுமுன்தினம் சமர்ப்பிக்கப்பட்டது.

இலங்கையில் முன்மாதிரியான மாநகர சபையாக மட்டக்களப்பு மாநகர சபையை மாற்றும் வகையிலான இந்த வேலைத் திட்டத்தில் 24 திட்டங்கள் அடங்கியுள்ளன.

கனவு, நம்பிக்கை, திட்டமிடல், விடாமுயற்சி, வெற்றி என்ற வகையில் தொடர் நடவடிக்கையாக அமையவுள்ள இந்த வேலைத்திட்டத்தின் அனைத்துவிதமான செயன்முறைகளும் ஜப்பான் நாட்டு தூதுவர் கெனிச்சி சுகுனுமா தலைமையிலான குழுவினருக்கு இதன்போது விரிக்கப்பட்டன.

முன்மாதிரியான மாநகர சபையாக மட்டக்களப்பு மாநகர சபையை மாற்றும் இந்த 1000 நாள் வேலத்திட்டத்தில் கேபிள் கார், நவீன சந்தை, பொழுதுபோக்குப் பூங்காக்கள், சோலார் வாகனத் தரிப்பிடம், குடிதண்ணீர்த்திட்டம். வடிகாலமைப்பு, பொது நூலகம். கிரிக்கெட் விளையாட்டரங்கு, பொது மண்டபம் என அனைத்து வகையான திட்டங்களும் அடங்கும்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் ரோகித்த போகொல்லாகமவின் செயலாளர் வி.தவராஜா, மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் என்.மணிவண்ணன் பிரதி ஆணையாளர் எஸ்.தனஞ்சயன், ஆளுநரின் பிரத்தியேகச் செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# தேர்தல் குறித்து ஜனாதிபதியே இறுதி முடிவெடுப்பார்!

மாகாண சபைத் தேர்தலை பழைய முறையில் நடத்துவதா? புதிய முறையில் நடத்துவதா? என்பது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை என ஸ்ரீ.சு.கட்சியின் இளைஞர் முன்னணியின் தலைவர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இது தொடர்பில் கட்சி உறுப்பினர்களிடம் வேறுபட்ட கருத்துகள் உள்ளன. பழைய முறைக்கு சிலர் ஆதரவு தெரிவிக்கின்றனர். புதிய முறைக்கு வேறு சிலர் ஆதரவு தெரிவிக்கின்றனர்.

ஆகவே இது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்று ஜனாதிபதியே இறுதி முடிவெடுப்பார் என சாந்த பண்டார குறிப்பிட்டார்.

# கடவத்தையில், துப்பாக்கிச் சூடு பெண் காயம்

கொழும்பு, ஓக. 08

கடவத்தை, கிரில்லவள பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் பெண்ணொருவர் காயமடைந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த பெண் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போதை மாத்திரையுடன் ஒருவர் கைது

வாழைத்தோட்டம், செக்குவத்த பகுதியில் ஒரு தொகை போதைப்பொருளை வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது இந்த நபரிடம் இருந்து யாபா எனும் 175 போதை மாத்திரைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. கொழும்பு 12 பகுதியை சேர்ந்த 55 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir



# எதிர்க்கட்சித் தலைமை தேவையெனில் அரசில் இருந்து வெளியேறி வாருங்கள்

## கூட்டு எதிரணிக்கு சுமந்திரன் சவால்

கொழும்பு, ஓக.08

தேசிய அரசில் ஆளும் தரப்பாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிக்கு எதிர்க்கட்சி அந்தஸ்தை வழங்குவது ஏற்றுக்கொள்ள முடியாது. எதிர்க்கட்சித்தலைமைப் பதவி வேண்டும் என்றால் அவர்கள் அரசை விட்டு வெளியேற வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பிரதான எதிர்க்கட்சி அந்தஸ்து குறித்து நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற விவாதத்தின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாடாளுமன்றத்தை வெவ்வேறு கட்சிகள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இதில் அரசில் அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் ஒரு தரப்பினர் எதிரணியில் அங்கம் வகிக்கின்றனர். எனினும் அவர்களும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியாகவே உள்ளனர். அவ்வாறு இருக்கையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தரக்கோருகின்றனர். ஆனால் இது சாத்தியமற்றதாகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் 23 பேர் அமைச்சரவையில் உள்ளனர். அரசின் தீர்மானங்களை முன்னெடுக்கின்றனர். ஆகையால் அதே அணியை எதிர்க் கட்சியாக அங்கீகரிக்க கோருவது ஏற்றுகொள்ள முடியாது – என்றார். (ஐ)

# சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் நாளை சுகவீன லீவுப் போராட்டத்தில்!

அகில இலங்கை சமுர்த்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர் சங்கம், சமுர்த்தி முகாமையாளர் சங்கம், அலுவலக ஊழியர் சங்கம் மற்றும் இலங்கை சுதந்திர பொது தொழிலாளர் சங்கங்களின் கூட்டிணைப்பான சமுர்த்தி உரிமைகளைக் காக்கும் தேசிய முன்னணி ஆகியவற்றின் ஏற்பாட்டில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், முகாமையாளர்கள் எதிர்கொள்ளும் நிர்வாக ரீதியான பிரச்சினைகளை முன்வைத்து நாளை நாடாளுமன்றச் சுற்றுவட்டத்தில் பெரியளவிலான எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக யாழ். மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் சங்கமும் நாளை மாவட்ட ரீதியில் சுகவீன லீவுப் போராட்டத்தை முன்னெடுக்க உள்ளது என யாழ். மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் தெரிவித்துள்ளது.

# வீர வசனம் பேசும் 70 பேர் 23 பேருக்கு அஞ்சுவது ஏன்?

## அனுரகுமார சபையில் கேள்வி

மக்களின் பலத்தை நிரூபித்துள்ளதாகக் கூறும் 70 பேர் அணி பலத்தை காட்டி ஆட்சியைக் கைப்பற்றுவதை விடுத்து எதிர்க்கட்சித் தலைமைப் பதவிக்கு ஏன் போராடுகின்றார்கள் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சித்தலைமைப்பதவி குறித்து நாடாளுமன்றில் நேற்று விவாதிக்கப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

எதிர்க்கட்சித் தலைவர் பதவி தரக்கோரிக் கூட்டு எதிரணியினர் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வருகின்றனர். இதற்கு முன்னர் ஆரம்பத்தில் 42 உறுப்பினர்கள் இருந்தபோதும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கேட்டனர், 54 பேர் இருந்த போதும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கேட்டனர், இப்போது 70 பேர் உள்ளபோதும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தரக்கோருகின்றனர். ஆனால் இவர்களின் கோரிக்கையில் எந்தவித அடிப்படை நியாயப்பாடுகளும் கிடையா.

இந்த நாடாளுமன்றத்தில் ஆறு அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் உள்ளன. அந்தக் கட்சிகளில் இருந்தே உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். 19 ஆம் திருத்தத்துக்கு அமைய கட்சி தன்மைகளைக் கைவிட்டு செயற்பட முடியாது. அவ்வாறு செயற்பட்டால் எதிர்க்கட்சி ஒன்று இல்லாத நிலைமை உருவாகும்.

இப்போதுள்ள நிலைமையில் எதிர்க்கட்சியின் எண்ணிக்கை குறைவுதான். மூன்று கட்சிகளுமாக மொத்தமாக 23 பேர் தான் உள்ளோம். நாம் பலம் குறைந்த எதிர்க்கட்சி தான். அதனை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். சில சந்தர்ப்பங்களில் பலவீனமாகவே நாம் உள்ளோம். ஆனால் நாடாளுமன்ற விதிமுறைக்கு அமைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதான எதிர்க்கட்சியாகச் செயற்பட முடியாது என ஒரு போதும் கூறமுடியாது.

கூட்டு எதிரணியினர் தமக்குத்தான் மக்கள் பலம் உள்ளதாகக் கூறுகின்றனர். 70 பேர் எதிர்க்கட்சியாக உள்ளதாகக் கூறுகின்றனர், முன்னாள் ஜனாதிபதி ஒருவர் உள்ளார். அனுபவம் மிக்க தலைவர்களைத் தக்கவைத்துள்ளதாகக் கூறுகின்றீர்கள். இவ்வளவு வீர வசனம் பேசும் 70 பேர் ஏன் 23 பேருக்கு அஞ்சி செயற்பட வேண்டும். உங்களின் பலத்தைக் காட்டி அரசை விட்டு வெளியேறி எதிர்க்கட்சியில் அமைந்து கொண்டு ஆட்சியைக் கைப்பற்ற முடியுமே. அதை விடுத்து ஏன் 23 பேர் உள்ள அணியில் தஞ்சம் புகுந்துகொண்டு செயற்பட வேண்டும் – என்றார். (ஐ)

# முதலமைச்சர் வேட்பாளர் இன்னும் முடிவாகவில்லை

## கூறுகிறார் சுமந்திரன் எம்.பி.

கொழும்பு, ஓக.08

வடக்கு மாகாணத்தின் அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் தொடர்பாக இன்னும் எவ்வித தீர்மானமும் எடுக்கவில்லையெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அடுத்த மாகாண சபைத் தேர்தலில் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளராக மீண்டும் சி.வீ.விக்னேஸ்வரனையே முன்னிறுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக வினவிய போதே சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அத்தோடு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளர்கள் தொடர்பாகச் சரியான நேரத்தில் அறிவிப்போம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வடக்கு முதல்வராகத் தெரிவு செய்யப்பட்ட விக்னேஸ்வரன், கூட்டமைப்புக்கு எதிராகச் செயற்பட்டு வருகிறார் எனக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் தொடர்பான சர்ச்சை தொடர்ந்து நீடித்து வருகின்றது.

இந்நிலையில், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவை அடுத்த முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறக்க தீர்மானித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதேவேளை, அடுத்த மாகாண சபைத் தேர்தலில் சி.வீ.விக்னேஸ்வரன், கூட்டமைப்பு அல்லாத மாற்றுக் கட்சியொன்றின் ஊடாக முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# திருமலை ஆசிரியை கொலை; இருவருக்கு தூக்குத் தண்டனை

திருகோணமலையில் ஆசிரியை ஒருவரைக் கொலை செய்த குற்றத்துக்காக இருவருக்கு தூக்குத் தண்டனை விதித்து திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார்.

இந்த வழக்கு விசாரணை நேற்று திருகோணமலை மேல் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தபோதே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட 4 சந்தேகநபர்களில் முதலாவது, இரண்டாவது சந்தேகநபர்கள் கூரிய ஆயுதத்தால் தாக்கி ஆசிரியையைப் படுகொலை செய்தனர் என்ற குற்றம் நிரூபிக்கப்பட்ட நிலையில் இவர்களுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

31 வயதுடைய பாலசிங்கம் நகுலேஸ்வரன், 21 வயதுடைய விஜயகுலசிங்கம் சந்திரபாலன் ஆகியோருக்கே தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

மேலும், 25 வயதுடைய கிருஷ்ணபிள்ளை சஜிவ்காந்தன், 20 வயதுடைய சிவகுமரன் சிவரூபன் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த கொலை சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, 2011.11.24ஆம் திகதி திருகோணமலை – சம்பூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாட்டாளிபுரம் – சந்தோசபுரம் ஆகிய இடங்களுக்கு இடையில் ஆசிரியை ஒருவர் கொலை செய்யப்பட்டிருந்தார்.

அந்தப் பகுதியில் வயல் வெளிக்கு அருகில் ஆசிரியை கொலை செய்யப்பட்ட நிலையில் காலை 6.45 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டார்.

சந்தோசபுரம் – கட்டைப்பரிச்சான் பகுதியில் வசிக்கும் 33 வயதுடைய குருகுலசிங்கம் ஸ்ரீவதனி என்ற பெண்ணே கொலையுண்டவர் ஆவார்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் நான்கு பேரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்திருந்தனர்.

இந்த வழக்கு தொடர்பான விசாரணைகள் மூதூர் நீதிவான் நீதிமன்றில் நடைபெற்று வந்த நிலையில், நீதிவானால் திருகோணமலை மேல் நீதிமன்றத்துக்கு அது பாரப்படுத்தப்பட்டது.

இதையடுத்து நேற்று இந்த வழக்குக்கான தீர்ப்புக்கு திகதி குறிப்பிடப்பட்டிருந்தது.

இதில், அந்த ஆசிரியரின் உடம்பில் 13 இடங்களில் காயங்கள் காணப்பட்டுள்ளன எனவும், நகைகள் திருடப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்ப்பித்து வராது போலும்.

மயிலிட்டி காச நோய் வைத்தியசாலைக்கும் இதே நிலைமை தான்.

மேற்படி காசநோய் வைத்தியசாலை 1990 வரை சுமுகமாக இயங்கிக் கொண்டிருந்தது. பலாலிப் பகுதியைச் சுற்றி 1990 இல் இலங்கை இராணுவம் திடீரென மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையை அடுத்து இப்பிரதேசம் இராணுவ ஆக்கிரமிப்புக்குள் கொண்டுவரப்பட்டது. மக்கள் வெளியேற்றப்பட்டனர். காசநோய் வைத்தியசாலையும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்தது. அந்தக் கட்டடத்தை இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்டது.

சும்மா, சிவனே என்று தன்பாட்டில் இயங்கிக் கொண்டிருந்த காசநோய் வைத்தியசாலைப் பிரதேசத்தில் திடீர் இராணுவ நடவடிக்கை ஒன்றைத் தொடங்கி, அந்தக் கட்டடத்தையும் சேர்த்து ஆக்கிரமித்து நிலை கொண்டிருந்த இராணுவம் சுமார் இருபத்தியெட்டு வருட ஆக்கிரமிப்புக்குப் பின்னர் இந்த ஆண்டு முற்பகுதியில் கட்டடத்தைக் கைவிட்டுவிலகியது. யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் அந்தக் கட்டடப் பிரதேசத்தையும் நிலத்தையும் 16ஆவது பட்டாலியன் விஜபா காலாட்படையின் அதிகாரி மேஜர் டபிள்யூ.ஜே.கே.ஹேரத் என்பவரிடமிருந்து பொறுப்பேற்றார்.

இந்தப் பொறுப்பேற்பு விடயத்தில் இரண்டு விடயங்கள் குறிப்பிடத்தக்கவை.

ஒன்று – இராணுவம் தன்பாட்டில் தானே கைப்பற்றி ஆக்கிரமித்திருந்த இந்தப் பகுதியை தமிழீழ விடுதலைப் புலிகள் முன்னர் ஆக்கிரமித்து வைத்திருந்தபோது அவர்களைத் துரத்தி இராணுவம் அதை மீட்டது என்ற மாதிரி இந்தக் காணிப் பொறுப்பேற்றப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்தது – மேற்படி விடயம் தொடர்பான பொறுப்பேற்றப் பத்திரத்தில் அங்கு காசநோய் வைத்தியசாலை இருந்ததாகவே, அந்தக் கட்டடத்தையே இராணுவம் இது வரை பயன்படுத்தி வந்த பின்னர் ஒப்படைக்கின்றது என்றோ ஏதும் குறிப்பிடப்படவில்லை.

யுத்தத்தில் முதலில் சாவது 'உண்மை' என்பதால், செத்துப்போன உண்மைக்கள் வெளியில் தெரியாமல் இப்படித்தான் மறைந்து போகும். அது தவிர்க்க முடியாததுதான்.

- மின்னல் -

### ஞானசார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாக நேற்று மாலை கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அறுவைச் சிகிச்சை ஒன்றுக்காகவே இவர் ஸ்ரீ ஜெயவர்தனபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தகவல்கள் தெரிவித்தன.

இதற்கு முன்னர் கடந்த 2006 ஆம் ஆண்டு இவருக்குச் சிறுநீரகப் பிரச்சினை காரணமாகச் சத்திர சிகிச்சை செய்யப்பட்டது.

மேலும் அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு தொடர்பான தீர்ப்பு இன்று வெளியாகவுள்ள நிலையில் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

### 1760 துப்பாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸார் தெரிவித்தனர்.

வவுனியா மூனாமடு இராணுவ முகாமுக்கு அருகில் வசிக்கும் பெண் ஒருவர் பழுதடைந்த முட்டைகளை மண்ணினுள் புதைப்பதற்காகக் குழி வெட்டும்போதே இந்தத் துப்பாக்கி ரவைகள் வெளிவந்துள்ளன.

இதனைத் தொடர்ந்து அருகில் இருந்து இராணுவ முகாமுக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்துத் வவுனியா குற்றத்தடுப்புப் பொலிஸாருக்கு மூனாமடு இராணுவத்தினரால் அறிவிக்கப்பட்டு வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவினரால் துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

ரி-56 ரக துப்பாக்கி ரவைகளே மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறினர். (ஐ)

### வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருந்தது. இந்த விடயம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

அமைச்சரின் பதவி பறிக்கப்படவேண்டுமென்றும், அவரைக் கைது செய்யவேண்டுமென்றும் தெற்கில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் அமைச்சரை விசாரணைக்கு அழைத்திருந்தனர்.

விசாரணைக்காகக் கொழும்பிலுள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவு அலுவலகத்துக்கு நேற்றுக் காலை 9.30 மணியளவில் சென்ற அமைச்சரிடம் பிற்பகல் 3.30 மணிவரை விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனக் கூறப்பட்டது. (ஐ-7)

### 27 இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகதிகளாகச் சென்ற 27 பேரே இவ்வாறு நேற்று நாடு திரும்பியுள்ளனர். இந்த 27 பேரும் 3 விமானங்கள் மூலம் நேற்றுக் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவ்வாறு இலங்கை வந்த அகதிகளிடம் குடிவரவு மற்றும் குடியல்வு அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டதையடுத்து மேலதிக விசாரணைகளுக்காக குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்டனர். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## முன்னைய முயற்சிகளின்றும் மாறுபடும் தற்போதைய அரசமைப்பு உருவாக்கம்

அரசமைப்பு என்பது நாட்டின் மீயுயர் சட்டம். சட்டங்கள் யாவற்றையும் கட்டுப்படுத்தும் உயரிய சட்டம்.

ஆனாலும், அந்த நாட்டில் வாழும் இனக் குழுமங்கள், சமூகங்களைப் பொறுத்தவரை அது சட்டம் என்பதற்கும் அப்பாற்பட்ட உயர் விதிமுறையாகக் கொள்ளப்பட வேண்டியது.

குறிப்பாகச் சொல்வதானால் பல்வேறு சமூகங்கள் ஒரு நாட்டில் இணக்கமாக – ஒன்றிணைந்து – வாழ்வதற்கான சமூக ஒப்பந்தம் அது. எல்லாத் தரப்புகளுக்கும் ஒன்றிணைந்து செய்து கொண்ட இணக்கமாக – உடன்பாடாக – அது இருக்க வேண்டும்.

பெரும்பான்மைச் சமூகம் சிறுபான்மைச் சமூகத்தின் மீது தனது ஆள் எண்ணிக்கை மேலாண்மை மூலம் வலிந்து திணிப்பதாக அது இருக்கக் கூடாது.

ஆனால், இலங்கையைப் பொறுத்தவரை சுதந்திர இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட மூன்று அரசமைப்புகளுமே இந்தத் தீவில் வசிக்கும் பல்வேறு சமூகங்களை ஒன்றிணைக்கும் சமூக ஒப்பந்தமாகவோ – உடன்பாடாகவோ – அமையவில்லை என்பதுதான் துரதிர்ஷ்டமாகும்.

சுதந்திர இலங்கையின் சோல்பரி யாப்பாக இருக்கட்டும், 1972 இல் கொண்டுவரப்பட்ட குடியரசு யாப்பாக இருக்கட்டும், 1978 இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவினால் கொண்டு வரப்பட்டு இப்போதும் நடைமுறையில் இருப்பதாகக் கருதப்படும் அரசமைப்பாகட்டும், இவை எல்லாமே இந்தத் தீவில் வசிக்கும் சகல சமூகங்களினாலும் இணக்கமான சூழ்நிலையில் ஏற்றுக் கொள்ளப்பட்டவையல்ல.

பெரும்பான்மைத் தரப்பினரால் சிறுபான்மையினர் மீது வலிந்து திணிக்கப்பட்ட சட்டங்களே இதுவரை இந்தத் தேசத்தில் அரசமைப்புச் சட்டங்களாக நிலையூன்றி வந்துள்ளன.

இலங்கை சுதந்திரம் பெறுவதற்கான கட்டளை இலங்கையில் நிறைவேற்றப்படவில்லை. பிரித்தானியாவில் நிறைவேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து இலங்கைக்கான முதலாவது அரசமைப்பும் பிரிட்டனில் பக்கிங்ஹாம் மாளிகையிலேயே தீர்மானிக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டது.

போர்த்துக்கீசரால் ஈழத் தமிழர்களிடமிருந்து வன்முறையால் கவரப்பட்ட எமது இறைமை இப்படித்தான், நாம் சம்பந்தப்படாத ஒரு தீர்மானம் மூலம் சிங்களத்துடன் இணைக்கப்பட்டு, அந்த அரசமைப்புக்குள் முடக்கப்பட்டது.

சுதந்திர இலங்கையின் முதலாவது அரசமைப்பு – சோல்பரி யாப்பு – மட்டுமல்ல, அதற்குப் பின்னர் 1972 மற்றும் 1978 ஆகிய ஆண்டுகளில் கொண்டு வரப்பட்ட இரண்டு அரசமைப்புகள் கூட தமிழர்களின் பங்குபற்றுதலுடனோ அல்லது ஈடுபாட்டுடனே நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை.

தமிழர்கள் அந்த அரசமைப்பு உருவாக்க நடவடிக்கைகளில் இருந்து விலக்கப்பட்டார்கள், தள்ளிநின்றார்கள். அவர்களுக்கு அந்நியமான வகையில் உருவாக்கப்பட்ட அந்த அரசமைப்புகள் அவர்கள் மீது வலிந்து திணிக்கப்பட்டன.

நாட்டின் சிறுபான்மையினரான தமிழர்கள் மட்டுமல்லர், அந்த இரு அரசமைப்புகளும் கொண்டு வரப்பட்ட சமயம் எதிர்க்கட்சி வரிசையில் இருந்த பிரதான சிங்களத் தேசியக் கட்சிகள் கூட, அந்த அரசமைப்புகளின் உருவாக்கத்தில் பங்கு கொள்ளவில்லை.

1972 அரசமைப்பு உருவாக்கத்தில் ஐ.தே.கட்சியும், 1978 அரசமைப்பு உருவாக்கத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் கூட பங்குபற்றவில்லை.

ஆக, நாடாளுமன்ற மேலாதிக்கம் என்ற அட்சர கணித எண்ணிக்கையின் அடிப்படையில் இந்த நாட்டின் மீது திணிக்கப்பட்டவையே இந்த அரசமைப்புகள். எனவே, பல்வேறு சமூகங்களையும் ஒன்றிணைக்கும் சமூக ஒப்பந்தங்களாக இந்த அரசமைப்புகள் கொண்டு வரப்படவில்லை என்பது தெளிவு.

ஆனால், இப்போதைய அரசமைப்பு உருவாக்கத்தில் அந்த முயற்சி நகல் யாப்பு வடிவத்தை எட்டும் அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ள அதேசமயம், அது தொடர்பான நடவடிக்கைகளில் – இதுவரை – நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் எல்லாம் பங்களித்து, சம்பந்தப்பட்டு ஈடுபாடு காட்டி வந்துள்ளன என்பது மிக முக்கியமான அம்சமாகும்.

முன்னைய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளோடு ஒப்பிடுகையில் தற்போதைய எத்தனங்களின் மிக முன்னேற்றகரமான பண்பியல்பு இது என்பது ஈண்டு கவனிக்கத்தக்கதாகும்.

# சுயநல அரசியல்வாதிகளாலேயே நல்லிணக்கம் சீர்குலைந்துள்ளது

## அமைச்சர் சுவாமிநாதன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக 08

சுய இலாபத்துக்காக அரசியல்வாதிகள் தெரிவிக்கும் கருத்துகளின் விளைவே இலங்கையில் நல்லிணக்கம் சீர்குலைவதற்குப் பிரதான காரணமாகும் என மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, இந்து மத விவகாரம் மற்றும் வடக்கு அபிவிருத்தி அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

இன, மத சகவாழ்வின் ஊடாக நிலையான நாடு என்ற தொனிப்பொருளின் கீழ் விசேட மாநாடொன்று நேற்றுமுன்தினம் கண்டி மகாவலி ரீச் ஹோட்டலில் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டின் நல்லிணக்கம் வரலாற்று தொடக்கம் சீராக காணப்பட்டாலும் சுய இலாபத்திற்காக அரசியல்வாதிகள் தெரிவிக்கும் கருத்துகளின் விளைவே இலங்கையில் நல்லிணக்கம் சீர்குலைவதற்குப் பிரதான காரணமாகும். ஆகவே இந்தச் சூழலை நாம் மாற்றி அமைக்க வேண்டும். இல்லையேல் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாமல் போகும்.

என்னுடைய ஒத்துழைப்பினால் இரு விகாரைகள் நிர்மாணிப்பதற்கு உதவிக் கரம் நீட்டியுள்ளேன். அதுபோன்று நாட்டில் வாழும் பெரும்பான்மையானோர் சகவாழ்வுடன் வாழ வேண்டும். மனிதர்கள் யாவரும் தர்மத்தை பின்பற்றி நடக்க வேண் டும். தர்மத்தை வழிதவற விட்டு சென்றோமானால் நல்லிணக்கம் பாதிப்புறும். – என்றார். (ஐ)

# மருத்துவ நிபுணர்களின் வருமான வரி மாற்றம் இல்லையென்கிறார் மங்கள

கொழும்பு, ஓக 08

மருத்துவ நிபுணர்களின் சம்மேளனத்தில் உறுப்பினர்களாக உள்ள மருத்துவ நிபுணர்களின் வருமான வரி மற்றும் சம்பளம் மீதான வரியில் எந்தவொரு மாற்றம் செய்யப்படவில்லை என நிதி அமைச்சர் மங்கள சமரவீர அறிவித்துள்ளார்.

மருத்துவ நிபுணர்கள் செலுத்தும் வருமான வரி 24 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன அறிவித்தார்.

இதனை மறுக்கும் வகையிலேயே நிதி அமைச்சர் மங்கள சமரவீர தனது கீச்சகத்தில் மேற்படி அறிவிப்பை விடுத்தார்.

மருத்துவ நிபுணர்களின் வரி அறவீட்டுக்கான செலவீனங்களை கணிப்பீடுசெய்து அவற்றை நீக்குவதற்கான நடைமுறைகளே தற்போது ஆராயப்பட்டு வருகின்றன என்றும் அமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சுகாதார அமைச்சர் மருத்துவர் ராஜித சேனாரத்னவின் இந்த நடவடிக்கை தனக்கு அதிர்ச்சியளிப்பதாக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தருமான ஹர்ஷடி சில்வா தெரிவித்துள்ளார்.

மருத்துவர்கள், விமானிகள், சட்டத்தரணிகள், அதிபர்கள் மற்றும் கடின உழைப்பில் நடுத்தர வருமானம் பெறுவோர் தொடர்பில் நாம் ஆராய வேண்டும். – நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# மாணவர்களின் தேவைகளை நிறைவேற்ற தவறிவிட்டது வடமாகாண கல்வி அமைச்சு

## கணேஸ் வேலாயுதம் குற்றச்சாட்டு



(எஸ்.நிதர்ன்)

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு பாதிக்கப்பட்ட மாணவர்களின் தேவைகளை நிறைவேற்றத் தவறிவிட்டது என்று குற்றம் சுமத்தியுள்ள கணேஸ் வேலாயுதம், அந்த மாணவர்களுக்குக் கிடைக்கும் உதவிகளையும் அமைச்சு தட்டிக்கழிக்கின்றது என்றும் சுட்டிக்காட்டினார்.

யாழ்.கிறீன்கிராஸ் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: –

வடக்கு மாகாணத்தில் 20 வீதமானவர்கள் அடிப்படைக் கல்வி அறிவு (எழுதப் படிக்க) அற்றவர்களாகக் காணப்படுகின்றார்கள். அவர்களின் கல்வித் தேவை உடனடியாக நிறைவு செய்து கொடுக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் வாள் தூக்கும் கலாசாரம்தான் இங்கு அதிகரிக்கும்.

எனது நிதியில் இருந்து ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கி சங்கானையில் 33 மாணவர்களுக்கு மேலதிக வகுப்புக்கள் நடத்தியிருந்தோம். ஆனால் அதனை நடத்தவிடாது வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு தடுத்துவிட்டது.

அதற்கு என்ன காரணம் என்று கோரி கல்வி அமைச்சருக்குக் கடிதம் ஒன்றை எழுதியிருந்தேன். அதற்கான பதில் இதுவரை கிடைக்கவில்லை. அந்த மாணவர்களுக்கு இதுவரை மேலதிக வகுப்புக்களும் வழங்கப்படவில்லை.

கல்வி அமைச்சரைச் சந்திப்பதற்கும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தேன். அதற்கும் கல்வி அமைச்சர் வாய்ப்புத் தரவில்லை. இவ்வாறு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு மாணவர்களின் கல்வி தேவையைத் தானும் நிறைவேற்றாமல், செய்பவர்களுக்கும் தடை விதித்து வருகின்ற. – என்றார். (ஐ – 7)

# அமைச்சர் அனந்தி சசிதரனுடன் அக்னி சென்னையில் சந்திப்பு



சென்னை, ஓக 08

வட மாகாண சமூக சேவைகள், புனர்வாழ்வு, மகளிர் விவகாரம் அமைச்சர் திருமதி அனந்தி சசிதரனை உலகத் தமிழர் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் அக்னி சென்னையில் மரியாதை நிமித்தம் சந்தித்தார்.

மூன்று நாள் பயணமாக சென்னை சென்றுள்ள அமைச்சரைச் சந்தித்த வேளையில், நடப்பு ஈழ விவகாரம், தமிழக அரசியல் குறித்தும் விரிவாகப் பேசினார்கள். சந்திப்பின்போது உலகத் தமிழர் பேரவையின் சென்னை தலைமையகப் பொறுப்பாளர் செல்வி வாசுகி உடனிருந்தார்.

தமிழக மக்களின் ஈழ அதரவு நிலைக்கு அமைச்சர் தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

## நாளை

09.08.2018
வியாழக்கிழமை
நட்சத்திரம் : திருவாதிரை காலை 7.05 வரை
பின்னர் புனர்பூசம் பி.இ 5.28 வரை
திதி : திரயோதசி மு.இ 9.20 வரை
சுபநேரம் :7.34 – 9.04 வரை
இராகுகாலம் : 1.34 – 3.04 வரை

# மீனவர்களுக்கு வாழ்வாதார உதவிகளை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் வழங்கினார்!





மன்னார் ஓக.08

அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் நிதியொதுக்கீட்டில், மன்னார் பிரதேச சபைக்குட்பட்ட கிராமங்களைச் சேர்ந்த, மீன்பிடித் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட 534 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை மன்னார், காட்டாஸ்பத்திரி மைதானத்தில் இடம்பெற்றது.

மன்னார் பிரதேச சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாஹிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கலந்துகொண்டதுடன், வடமாகாண சபை உறுப்பினர் அலிகான்ஷெரீப், அமைச்சின் பிரத்தியேகச் செயலாளர் ரிப்கான் பதியுதீன், முசலி பிரதேச சபை தவிசாளர் சுபியான், முன்னாள் அட்டாளைச்சேனை பிரதேச சபை தவிசாளர் சட்டத்தரணி அன்ஸில் மற்றும் மன்னார் பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மன்னார் பிரதேச சபைக்குட்பட்ட பேசாலை வடக்கு – மேற்கு, முருகன் கோவில், காட்டாஸ்பத்திரி, வசந்தபுரம், தலைமன்னார் கிராமம், தலைமன்னார் பியர், சிறுதோப்பு, தோட்டவெளி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 534 மீனவக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளம் காங்கிரஸ் நடவடிக்கை




தோட்ட தொழிலாளர்களுக்கான நியாயமான சம்பளத்தை பெற்றுக்கொடுக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுவருகிறது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவரும் ஊவா மாகாணசபையின் உறுப்பினருமான செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்ரஸ், முதலாளிமார் சம்மேளனம் இலங்கை தொழிலாளர் ஒன்றியம் மற்றும் ஜப்பானிய நிறுவனமான ஜிலாப் நிறுவனம் ஆகியன இணைந்து முறைசாரா தொழிலாளர்க ளை ஊக்குவிக்கும் வகையிலான அடிப்படை அபிவிருத்தி ஏற்படுத்தக் கூடிய வேலைத் திட்டத்தை அறிமுகப்படுத்தும் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கலந்துகொண்டதன் பின் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தை பெற்றுக் கொடுப்பதற்காக தொழிலாளர் காங்கிரஸ் முதலாளிமார் சம்மேளனத்துடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகிறது என்றும் அவர் சுட் டிக்காட்டினார்.

## மட்டு. மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் சிறப்பை சர்வதேச ரீதியாக கொண்டுசெல்ல நடவடிக்கை



மட்டக்களப்பு, ஓக. 08

வரலாற்று சிறப்பு மிக்க மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் சிறப்பை சர்வதேச ரீதியில் கொண்டு செல்வதற்கானநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என கிழக்கு மாகாண ஆளுநர் ரோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

தனது 64 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்திற்கு நேற்று முன்தினம் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து ஆலயத்தையும், புனரமைக்கப்படுகின்ற வரலாற்று சிறப்புமிக்க மாமாங்கேஸ்வரர் ஆலய தீர்த்த கேணியையும் ஆளுநர் பார்வையிட்டுள்ளார்.

மாமாங்கேஸ்வரர் ஆலயம் உட்பட பல்வேறு பகுதிகளுக்கான போக்குவரத்து பாதையாகவுள்ள மாமாங்க ஆலய வீதி காபெற் இடப்பட்டு இதன் போது ஆளுநரால் திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண உதவி நிதி திட்டத்தின் கீழ் 2 கோடி ரூபா செலவில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் இந்த வீதி புனரமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது.

வீதி திறந்துவைக்கப்பட்டதை தொடர்ந்து மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தினரால் விக்னேஸ்வரா திருத்தொண்டர் மடத்தில் ஆளுநரை கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் எம்.உதயகுமார் மற்றும் கிழக்கு மாகாண அமைச்சின் செயலாளர்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டனர்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் 88 விவசாய கிணறுகள்

கிளிநொச்சி மாவட்டத்தில் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் நிதியுதவியுடன் 88 விவசாய கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாய செய்கைகளை மேம்படுத்தும் வகையிலும், விவசாய குடும்பங்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் வகையிலும் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தினூடாக பல்வேறு வேலை திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என மாவட்ட விவசாய திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இவ்வாண்டு 23.10 மில்லியன் ரூபா செலவில் 88 விவசாயக்கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது கரைச்சி பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள மாயவனூர் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 19 பயனாளிகளுக்கு 19 கிணறுகள் 7.24 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படுகின்றன.

தொடர்ந்தும் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள புன்னைநீராவி கிராமத்தில் 25 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 25 கிணறுகள் 7.86 மில்லியன் செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

மேலும் பூநகரி பல்லவராயன் கட்டு பகுதியில் 5 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 0.42 மில்லியன் ரூபா செலவில் திருத்த வேலைகளும் பளைப்பிரதேச செயலர் பிரிவில் உள்ள இயக்கச்சி கோயில் வயல் ஆகிய பகுதிகளில் 19 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 19 கிணறுகள் 3.68 மில்லியன் ரூபா செலவில் வேலைகள் நடைபெற்று வருகின்றன என விவசாய திணைக்கள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த ஆண்டில் இதே திட்டத்தின் கீழ் மாவட்டத்தின் 175 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான புதிய கிணறுகள் அமைத்தல் கிணறுகளை திருத்துதல் போன்ற வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தென்னக்கோனுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு!

வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு இன்று பிரியாவிடை நிகழ்வொன்று நடத்தப்படவுள்ளது.

வவுனியா கலாசார மண்டபத்தில் சிவில் சமூக அமைப்புக்களால் இந்த பிரியாவிடை நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளது.

வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் கடந்த 2 வருடங்களுக்கு மேலாக வன்னிப் பிராந்தியத்தில் பல மக்கள் நலன் வேலைத்திட்டத்தை மேற் கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவருக்கு வருடாந்த இடமாற்றத்தில் கொழும்பு வடக்குப் பகுதிக்கு இடமாற்றம் இலங்கை பொலிஸ்மா அதிபரினால் தற்போது வழங்கப்பட்டுள்ளது.

இதையடுத்து வன்னிப்பிராந்தியத்தில் பல மக்கள் நலன் சேவைகளை மேற்கொண்டுள்ளமையினால் அதனைப்பாராட்டும் முகமாகவும் மதிப்பளிக்கும் நிகழ்வாகவும் இன்று இடம்பெறவுள்ள பிரியாவிடை நிகழ்வுக்கு அனைவரையும் இனமத பேதமின்றி கலந்துகொள்ளுமாறு மாவட்ட சிவில் சமூக அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# உயர்தரப் பரீட்சை மாணவிகளுக்கு பர்தா இல்லாமல் வருமாறு பணிப்பு

## ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில் விசனம்

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் முஸ்லிம் மாணவிகளுக்கு பர்தாவுக்குப் பதிலாக முந்தானை அணிந்து வருமாறு பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரிகள் கட்டாயப்படுத்திய சம்பவங்கள் உரிய அமைச்சர்களின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது என ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில் தலைவர் என்.எம். அமீன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

நேற்றுமுன்தினம் ஆரம்பமாகிய உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய முஸ்லிம் மாணவிகள், சில பரீட்சை நிலையங்களுக்கு சென்ற போது பர்தாவுடன் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவர்களுக்கு பர்தாவுக்குப்பதிலாக முந்தானை அணிந்து கொண்டு பரீட்சை நிலையத்துக்குள் பிரவேசிக்குமாறும் நிலையப் பொறுப்பதிகாரிகள் கட்டாயப்படுத்தியுள்ளனர்.

இதுபோன்ற சம்பவங்கள் ஹெம்மாத்தகம அல் அஸ்ஹர் வித்தியாலயம், பேருவளை ஆரியவங்ச வித்தியாலயம், பண்டாரகம மத்திய கல்லூரி ஆகிய பரீட்சை நிலையங்களில் பரீட்சை எழுதச் சென்ற முஸ்லிம் மாணவிகளுக்கு இடம்பெற்றுள்ளன. சில இடங்களில் நிலையப் பொறுப்பதிகாரிகள் கூறிய பிரகாரம் மாணவிகள் பரீட்சை எழுதியுள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸிலிடம் முறையிட்டனர். இதனையடுத்து, நாம் அமைச்சர் கபீர்ஹாஷிம், நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு வந்தோம்.

இவர்கள் கல்வி அமைச்சருடன் பேசி உடனடியாக தீர்மானம் ஒன்றுக்கு வருவோம் என தெரிவித்தனர் எனவும் முஸ்லிம் கவுன்ஸில் தலைவர் என்.எம். அமீன் தெரிவித்தார்.

# சைவபரிபாலன சபை நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், ஒக.08

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் 100 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டமும் புதிய அங்கத்தவர்களின் தெரிவும் அண்மையில் நடைபெற்றன. சபையின் புதிய உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு:-

தலைவர் - இ.வசந்தசேனன், செயலாளர் - நா.வன்னியசிங்கம், பொருளாளர் - வி.தயாபரன், உப தலைவர் - இரா.செல்வவடிவேல், என்.சுதர்சன், உப செயலாளர் - செல்வி ச.வினோதினி, மேலதிக செயலாளர் - சே.செல்வராஜன், பரீட்சை செயலாளர் - பொ.கமலநாதன், பரீட்சை உப செயலாளர் - த.பாலகிருஷ்ணன், சமய பிரசார அமைச்சர் - திருஞானசம்பந்த பிள்ளை, இந்து சாதன பத்திரிகை ஆசிரியர் த.மயூரகிரி, உள்ளகக் கணக்காய்வாளர் - நா.இராசநாயகம். (இ

# தினசரி ராசி பலன் (08.08.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆடித்திங்கள் 23 ஆம் நாள் புதன்கிழமை துவாதசித்திதி பி.இ 2.10 மணி வரை பின்னர் திரியோதசி. நட்சத்திரம்: மிருகசீரிடம் பகல் 10.47 வரை பின்னர் திருவாதிரை. சித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - பகல் 12.16 மணி முதல் 1.49 மணி வரை.

**சுபநேரம்** - மாலை 4.36 மணி முதல் 6.04மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - ஆடி மாத தேய்பிறை துவாதசி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு**- மிருகசீரிடம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். வியாபாரத்தில் ஓரளவு ஏற்ற, இறக்கமான நிலை இருக்கும். குடும்ப நிலையில் கலகலப்பும், சலசலப்பும் நிறைந்து காணப்படும்.

**ரிஷபம்** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். நீண்ட நாள் தள்ளிப்போன காரியம் எளிதாக முடியும். வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும். குடும்பத்தில் இதுவரை இருந்த குழப்பம் தீரும்.

**மிதுனம்** நன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். தைரியம், தன்னம்பிக்கை அதிகரிக்கும். பிரிந்திருந்த குடும்பங்கள் ஒன்று சேரும். சகோதர வழி உதவிகள் கிடைக்கும்.

**கடகம்** சலனம் மிகுந்த நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பச் செலவு அதிகரிப்பால் மன அமைதி கெடும். உறவினர்கள் சிலர் இவர்களுக்கு எதிராகத் திரும்புவார்கள். வேலை தேடுவோர் நிறைய அலைய வேண்டி வரும்.

**சிம்மம்** உயர்வான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். மாணவர்களுக்கு படிப்பில் ஆர்வமும், உத்வேகமும் பிறக்கும். சகோதர வழியால் நன்மைகள் உண்டாகும்.

**கன்னி** சமபலன்கள் காணப்படுகின்றன. வரவும் செலவும் சமமாக இருக்கும். உத்தியோகத்தர்கள் உயர் அதிகாரிகளின் கெடுபிடிகளைச் சந்திக்க நேரும். எதிர்பாராத ஒரு பயணத்தை மேற்கொள்ள நேரும்.

**துலாம்** யோகமான நாள். தனலாபம் பெருகும். குடும்பத்தில் சுமுகமான போக்கு நிலவி வரும். உத்தியோகத்தர்கள் உயரதிகாரிகளின் ஆதரவை முழுமையாகப் பெற்று மகிழ முடியும்.

**விருச்சிகம்** குழப்பமான நாள். பணவரவு குறையும். செலவினங்கள் அதிகரிப்பால் தடுமாறுவார்கள். குடும்பத்தில் வீண் சந்தேகங்கள் உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியில் மந்த நிலை உண்டாகும்.

**தனுசு** விருத்தியான நாள். பொருளாதாரம் ஏற்றம் அடையும். வியாபாரத்தை விரிவுபடுத்தும் நோக்கில் புதிய கிளைகளைத் தொடங்குவார்கள். மாணவர்கள் கல்வியில் விருத்தி அடைவார்கள்.

**மகரம்** இன்பமான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். நீண்ட நாள் காணாதிருந்த சகோதரர்களைக் கண்டு மகிழ்வார்கள். வீட்டில் காணாமல் போன பொருள்கள் திரும்பக் கிடைக்கும்.

**கும்பம்** சுபீட்சமான நாள். பணம் பல வழிகளாலும் வந்து சேரும். குடும்பத்தில் சந்தோஷம் நிறைந்து சுபீட்சம் உண்டாகும். பூர்வீகச் சொத்துக்கள் வந்து சேரும். ஆடை, அணிமணிச் சேர்க்கை உண்டாகும்.

**மீனம்** சஞ்சலம் நிறைந்த நாள். தனவரவு குறையும். குடும்பத்தில் கசப்புணர்வு ஏற்படும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. வியாபாரத்தில் பெரும் நட்டம் உண்டாகும். வழக்குகள் தாமதமாகும்.

சந்திராஷ்டம நாள்; **விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் சுப கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# நல்லாட்சியை விமர்சிப்பவர்கள் ஆட்சியில் என்ன செய்தார்கள்?

## நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கேள்வி

அமைச்சின் சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்த ஊழல் அமைச்சர்களே இன்று நல்லாட்சியை விமர்சிப்பவர்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.



கிண்ணியாவில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

திருகோணமலை மாவட்டத்தில் ஊடகவியலாளர்கள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கான வீட்டுத் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும். வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாசவால் நாடு முழுவதும் மாதிரி கிராமங்கள் அமைக்கப்பட்டுவருகின்றன. அவரால் இந்த குறுகிய காலத்தில் அமைக்கப்பட்ட நூறாவது மாதிரிக்கிராமும் அண்மையில் திருகோணமலையில் திறந்து வைக்கப்பட்டது.

திருகோணமலையில் உள்ள ஊடகவியலாளர்களுக்கும், விளையாட்டு வீரர்களுக்குமான வீட்டு திட்டம் ஒன்றை விரைவில் அமைச்சரின் தலைமையில் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்தவின் ஆட்சிக்கும் எமது ஆட்சிக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை இதனைக் கொண்டு மக்கள் அறிந்துகொள்ள முடியும் எனவும் கூறியுள்ளார்.

மஹிந்தவின் ஆட்சியில் இந்த அமைச்சை பொறுப்பேற்றிருந்த விமலினால் இதே போன்று எத்தனை கிராமங்கள் அமைக்கப்பட்டுள் என என யாராவது கூற முடியுமா? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவரின் ஆதரவாளர்களுக்கு அரச வாகனங்களை பெற்றுக்கொடுக்கவும் தனது மனைவியை போலி கடவுசீட்டில் வெளிநாட்டுக்கு அனுப்பவுமே அவர் இந்த அமைச்சை பயன்படுத்தினார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு அமைச்சின் சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்த ஊழல் அமைச்சர்களே இன்று நல்லாட்சியை விமர்சிக்கின்றனர் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார். (கு)

### மினுவாங்கொடை சூட்டுச் சம்பவம்;

# வயோதிபர் கொலை தொடர்பில் சந்தேகநபர்கள் இருவர் கைது!

கொழும்பு, ஒக 08

மினுவாங்கொடை யடியான சந்தியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்த நிலையில் அந்தக் கொலைச் சம்பவத்துடன்தொடர்புடைய இருவரை மினுவாங்கொடைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தக் கொலை இரு தரப்பினரிடம் காணப்பட்டு வந்த பழைய தகராறு ஒன்றின் பழிதீர்க்கும்செயலே எனப்பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மினுவாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யடியான சந்தியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மதியம் 11.10 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரினால் மேற் கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் வயோதிபர் ஒருவர் பலியாகியுள்ளார்.

மினுவாங்கொடையைச் சேர்ந்த 68 வயதுடைய விஜயமுனி ஜஸ்டின் ரதன சிறி சில்வா என்பவரே இவ்வாறு பலியானவராவார்.

பட்டம் விடுதல் தொடர்பாக இரு தரப்பினரிடையே கடந்த 2017 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 26 ஆம் திகதி ஏற்பட்ட தகராறில் மேற்கொள்ளப்பட்ட கத்திக் குத்துத் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தையும் மகனும் பலியாகி இருந்தனர்.

இது தொடர்பான வழக்கு மினுவாங்கொடை நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்றுவரும் நிலையில் சந்தேகநபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டவர்களினாலேயே பழி தீர்க்கும் முகமாக இவ்வாறு துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தக் கொலை தொடர்பில் இரு சந்தேகநபர்களை மினுவாங்கொடை பொலிஸார் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

# போதை மாத்திரைகளுடன் இருவர் திருமலையில் கைது

திருமலை, ஒக 08

திருகோணமலை, கிண்ணியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் போதை மாத்திரைகளுடன் இருவரை கைதுசெய்திருக்கின்றோம் எனக் கிண்ணியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

திருகோணமலை போதைப் பொருள் ஒழிப்பு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கிணங்கவே கிண்ணியா நகர்ப் பகுதியிலுள்ள தனியார் மருந்து விற்பனை நிலையமொன்றின் அருகில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து 300 இற்கும் மேற்பட்ட போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு வரும் கிண்ணியா பொலிஸார் அவர்களை கிண்ணியா நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் எனக் கூறப்பட்டது. (ஐ)

# ஆடிப்பூரத் திருவிழா

வட்டுக்கோட்டை, ஒக.08

வட்டு. மேற்கு தெக்கணப்பாய் கண்ணகாம்பிகாவுக்கு எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு ஆடிப்பூர அபிஷேகப் பூஜைகள் இடம்பெறும்.

மாலை 4 மணிக்கு அம்மன் பூந்தண்டிகையில் ஆரோகணித்து வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருட்காட்சி கொடுப்பார்.

* * *

வட்டு.மேற்கு தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரருக்கு ஆடிப்பூரத் திருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை காலை இடம்பெறுகின்றது.

கண்ணலிங்கேஸ்வர் மாலை 4 மணிக்கு மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருட்காட்சி கொடுப்பார். (இ

# நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதல் என்பது நாட்டையும் தேசத்தையும் வெற்றி நோக்கி முன்னெடுப்பதாகும்

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதல் என்பது நாட்டையும் தேசத்தையும் வெற்றி நோக்கி முன்னெடுப்பதாகும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களின் எதிர்காலத்திற்காக அச்செயற்பாடுகளை நிறைவேற்ற அனைவரையும் ஒன்றிணையுமாறு சகல அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகள், தனியார் துறையினர், வர்த்தகர்கள் உள்ளிட்ட சகல துறை சார்ந்தோரையும் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட சகல இலங்கையர்களுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்தார்.



ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

'பேண்தகு தொலை நோக்கினை அங்குரார்ப்பணம் செய்தல் மற்றும் பேண்தகு கருத்தாய்வு வரைவினை மக்களிடம் கையளிக்கும் வைபவம்' நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன இந்த அழைப்பை விடுத்தார்.

தேசிய பேண்தகு கருத்தாய்விற்காக வரைவு, தேசிய பேண்தகு அபிவிருத்தி பற்றிய நிபுணர் குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் முனசிங்ஹவினால் இதன்போது ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மேலும் உரையாற்றியவை வருமாறு –

தேசியபேண்தகுஅபிவிருத்தி கருத்தாய்வில் இரண்டு விசேட பிரேரணைகளை முன்வைக்கிறேன். யானைகள் மனிதர்களுக்கு ஏற்படுத்தும் பாதிப்புக்களுக்கு நிலையான தீர்வை கண்டறிதல் மற்றும் நாட்டின் உணவு உற்பத்தியின் 32 சதவீதத்திற்கும் அதிகமான அளவில் விலங்குகளினால் வீணடிக்கப்படுவதனால் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொள் எல் தொடர்பாக சகலரது ஆலோசனைகளையும் கருத்துக்களை யும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே அவ்விரு பிரேரணைகள் ஆகும்.

இவ்விடயங்கள் தொடர்பில் பல்வேறு பிரச்சினைகளும் குற்றச்சாட்டுகளும் பல காலமாக முன்வைக்கப்பட்டு வருவதுடன், அரசுகளினால் காலத்திற்கு காலம் பல்வேறு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் இதுவரை உரிய தீர்வு எட்டப்படவில்லை. இவ்விடயம் தொடர்பில் தமதுஆலோசனைகளை அரசியல் கட்சி பேதமும் குறுகிய மனப்பான்மையும் இன்றி முன்வைக்குமாறு சகலருக்கும் அழைப்பு விடுகிறேன். தேவையாயின் என்னை நேரடியாகச் சந்தித்து ஆலோசனைகளை கையளிக்க முடியும்.– என்றார்.

வெளிநாடுகளுக்குச் செல்லவிருக்கும் பொறியியலாளர்களுக்கும் பகீரங்க அழைப்பு விடுத்த ஜனாதிபதி, நாட்டிற்கான தமது கடமைகளை நிறைவேற்ற மேலும் ஒரு சில வருடங்களுக்கேனும் தாய்நாட்டில் தங்கியிருக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

## இலங்கைக்கு தங்கம் கடத்தல்:
## 6 சுங்க அதிகாரிகள் உட்பட 19 பேர் அதிரடியாகக் கைது!

கொழும்பு, ஓக. 08

தங்கம் கடத்தலுக்கு துணை போன சுங்க அதிகாரிகள் ஆறு பேர் உள்ளிட்ட 19 பேர் திருச்சி விமான நிலையத்தில் வைத்து அதிரடியாக நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருச்சி விமான நிலையம் சர்வதேச தரத்தை அடைந்துள்ள நிலையில், அங்கிருந்து இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு தங்கம் அதிகளவில் கடத்தி வரப்படுகின்றது.

இந்நிலையில். தங்கம் கடத்தலை கட்டுப்படுத்தும் நோக்கில் திருச்சி விமான நிலையத்தில் சிறப்பு நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இதன் போது சுங்க அதிகாரிகள் உள்ளிட்ட 19 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், இந்த சிறப்பு நடவடிக்கையின் போது கணக்கில் வராத ஒன்பது லட்சம் ரூபா இந்திய பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ள து என இந்திய ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அனுராதபுரம் மாநகர சபையின் நிதி மோசடி விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஓக. 08

அனுராதபுரம் மாநகர சபையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த அலுவலகத்தில் பணிபுரிந்த பிரதான எழுதுவினைஞர் நால்வர் மற்றும் வருவாய் கட்டுப்பாட்டாளர் ஒருவர் மீதும் நடவடிக்கை எடுப்பதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொலிஸார் கூறியுள்ளனர்.

அனுராதபுரம் மாநகர சபையில் கடந்த 2013ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரை 3 கோடியே 80 லட்சம் ரூபா நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது என இரகசிய பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எனினும், மோசடி செய்யப்பட்டதாகக் கூறப்படும் நிதி அதிகமாக இருக்கலாம் எனவும் விசாரணைக் குழு சந்தேகம் வெளியிட்டுள்ளது.

இதேவேளை சம்பவம் தொடர்பில் அனுராதபுரம் மாநகர சபையின் சம்பளத்துக்குப் பொறுப்பான அதிகாரி கைது செய்யப்பட்டு எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மேலும், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அனுராதபுரம் குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அனுமதியின்றி மரை இறைச்சி கொண்டு சென்ற இருவர் கைது

திருகோணமலை, ஓக. 08

திருகோணமலை, அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மரை இறைச்சி 10 கிலோவைக் கொண்டு சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சந்தேகநபர்களை நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளோம் என் அக்போபுர பொலிஸார் கூறினர்.

அத்துடன், அவர்கள் கித்துல் ஊற்றுப் பகுதியிலிருந்து கந்தளாய் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் அனுமதிப்பத்திரமின்றி பத்து கிலோ மரை இறைச்சியை கொண்டு சென்றபோது பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அக்போபுர, தல்கஸ்வெவ,மற்றும் கித்துல் ஊற்று பகுதியைச் சேர்ந்த 36 மற்றும் 49 வயதுடையவர்கள் என தெரியவந்துள்ளது.

மேலும், சந்தேகநபர்களை தடுத்து வைத்து விசாரணைகள் மேற்கொண்டு வருவதோடு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளோம் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## இலங்கைக்கு நிதி தொழில்நுட்ப ரீதியான உதவிகளை சீனா வழங்கி வருகின்றது!

### உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர்

சீனா கல்வி சார்ந்த உதவிகள் மாத்திரமன்றி பொருளாதாரம், மருத்துவம், உட்கட்டமைப்பு, வீதி அபிவிருத்தி போன்ற பல்வேறு துறைகளிலும் இலங்கைக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப ரீதியான உதவிகளை வழங்கி வருகின்றது என உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் மாதவ தேவசுரேந்திர தெரிவித்தார்.

2018 மற்றும் 2019 ஆம் கல்வியாண்டுக்குரிய இலங்கை மாணவர்களுக்கான சீன அரசாங்கத்தின் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று கொழும்பிலுள்ள சீன தூதரகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகை யிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்–

சீனாவின் பட்டுப்பாதை திட்டத்தில் இடம்பெறுகின்ற முக்கிய நாடாக இலங்கை உள்ளது. இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் இருநாடுகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட இறப்பர் – அரிசி உடன்படிக்கையிலிருந்து பரஸ்பரம் இருநாடுகளுக்கிடையில் நல்லுறவு நிலவி வருகின்றது.

அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம், துறைமுக நகரம், அதிவேக நெடுஞ்சாலை என்பன சீனாவின் உதவியுடன் அமைக்கப்பட்டவை ஆகும். குறிப்பாக தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற தாமரைக்கோபுரம் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நினைவுச்சின்னமாக எப்போதும் திகழும் என்று கூறினார்.

## ஆஸியில் மஹிந்தவுக்கு வீடு?

முன்னாள்ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ஷவுக்கு சொந்தமானதென கூறப்படும் வீடு தொடர்பில் சமூக வலைத்தளங் களில் தகவல் வெளியாகி உள்ளது.

ஆஸ்திரேலியாவிலுள்ள வீடொன்றில் மஹிந்த ராஜபக்ஷ என்ற பெயருடைய பதாகை ஒன்று ஒட்டப்பட்டுள்ளது.

எனினும் அந்த நாட்டில் வாழும் இலங்கையர் இந்த வீடு தொடர்பில் உண்மைத் தன்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ என்ற பெயருடைய இந்த பதாகை, உண்மையான உரிமையாளரின் பெயருக்கு மேல் ஒட்டப்பட்டுள்ளது.

இதுவொரு திட்டமிட்ட செயல். மஹிந்தவுக்கு எதிராக சேறு பூசும்வகையில் இவ்வாறு ஒட்டப்பட்டுள்ளதாக என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆட்சியின் போது பெரும் ஊழல் மோசடியில் மஹிந்த குடும்பம் ஈடுபட்டது என்றும் பெருமளவு நிதியை வெளிநாடுகளில் பதுக்கி வைத்துள்ளது என்றும் குற்றம்சாட்டுகள்எதிர்த்தரப்புக் முன்வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கொச்சிக்கடை பொன்னம்பலவானேஸ்வரர் ஆலயத்தில் அம்மனுக்கு லட்சார்ச்சனை!

கொழும்பு – கொச்சிக்கடையில் அமைந்துள்ள ஸ்ரீ பொன்னம்பலவானேஸ்வரர் ஆலயத்தில் அம்மனுக்கு லட்சார்ச்சனை இடம்பெற்றுள்ளது.

ஆடிப்பூரத்தை முன்னிட்டு அம்மனுக்கு லட்சார்ச்சனை செய்யப்பட்டுள்ளதுடன், இதற்கான பூஜைகள் நேற்றுக் காலை ஏழு மணியளவில் நடத்தப்பட்டுள்ளன.

இதன்போது சென்னையிலிருந்து வந்துள்ள பேராசிரியர் அனந்தராமனின் பக்தி மாலை நிகழ்வும் நடைபெற்றுள்ளது.

இதேவேளை குறித்த பூஜை மற்றும் நிகழ்வுகளில் பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனின் அருளைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆணொருவரின் சடலம் வாழைச்சேனை பொலிஸாரால் மீட்பு!

ஓட்டமாவடி பாலத்திற்கு அருகில், தியாவட்டவான் பிரதேசத்தில் அடையாளம் தெரியாத ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்த சடலத்தை நேற்று காலை வாழைச்சேனை பொலிஸார் மீட்டுள்ளனர்.

சடலமொன்று கரையொதுங்கியுள்ளது என வாழைச்சேனை பொலிஸாருக்கு அப்பகுதி பொதுமக்கள் தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து அந்த இடத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை சடலமாக மீட்கப்பட்டவர் 55 – 60 வயதிற்கு இடைப்பட்டவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வாழ்வகத்தில் ஆங்கில தினம்

யாழ்ப்பாணம், ஓக.08

யாழ். சுன்னாகத்தில் அமைந்துள்ள "வாழ்வகம்" நடத்தும் ஆங்கில தினம் இன்று புதன்கிழமை காலை 9 மணியளவில் வாழ்வக செல்வா மண்டபத்தில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி கருணா சிவாஜி கலந்து கொள்வார். (இ

இளையோர், சிறார், வேலை தேடுவோர்,வேலை செய்வோருக்கு

# தகவல் தொழில் நுட்பம், ஆங்கிலக் கற்கைநெறி










கற்றற் செயற்பாடுக ளுக்கான பிரதான நிதி வழங்குநரான இரத்தினம் பௌண்டேஷனின் (UK) தனது பெரு முயற்சியில் வடமாகாணத்தில் YARL CITE என்னும் அறக்கட்டளையை நிறுவி அதன் ஓர் அங்கமான CENTRE FOR IT EDUCATION மூலம் இளையோர், சிறார்கள், வேலை தேடுபவர்கள் மற்றும் வேலைசெய்வோருக்கான தகவல் தொழில் நுட்பம் மற்றும் ஆங்கில அறிவை மேம்படுத்துவதற்கும், சர்வதேசதரத்திற்கு ஈடு கொடுக்கக் கூடியதும் மற்றும் சுயமாக செயற்படுவதற்குமான ஒரு முன்னோடி கற்கை நெறிகளை முதற்கட்டமாக யாழ்ப்பாணத்தில் இல.125, பிரதான வீதியில் ஆரம்பித்து நடத்திவருகின்றது. இந்தச் செயற்பாட்டை மேலும் விஸ்தரிக்கும் நோக்கில் Job Skills Development & Training இனூடாக யாழ்ப்பாணத்தில் இருக்கும் துறைசார் தேர்ச்சி பெற்றோரை அடக்கிய ஒரு குழுச் செயற்பாட்டின் மூலம் மாணவர் மற்றும் பயனாளர் தேவைக்கேற்ப பயிற்சி நெறிகளை உருவாக்கி நடத்த முன்வந்துள்ளது. அத்துடன் வறியமாணவர்கள், வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்ப உறுப்பினர்கள் இலவசமாக கற்கை நெறிகளை மேற்கொள்ள முடியும்.அத்துடன் இளஞ் சிறார்களுக்கு ஆரம்பத்தில் இருந்தே தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கிலத்தில் பயிற்சிகளை வழங்கி படிப்படியாக துறைசார் திறன் விருத்திச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்கில் Computer Wise Kids என்னும் கற்கை நெறியையும் நடத்தி வருகின்றது.


இதரசேவைகளாக அதிகூடிய பெறு பேறுகளைப் பெறும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களையும் ,நவீன தகவல் தொழில் நுட்ப சாதனங்களின் உதவியுடன் கற்கை நெறிகளை நடத்தும் நிறுவனங்களுக்கு நிதி உதவிகளையும் செய்து வருகின்றது.

சேவைகள் பற்றி மேலும் விவரமறிய அதன் பணிப்பாளருடன் (077 2928853) தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# வலிகாமம் கிழக்கில் பாதீனிய ஒழிப்பில் பிரதேச சபையுடன் யாழ்.பல்கலை சமூகமும்







யாழ்ப்பாணம், ஓக.08

வலிகாமம் கிழக்கு பிரதேசத்தில் பாதீனிய ஒழிப்பு முயற்சிகளுக்காக பிரதேச சபையும் யாழ்ப்பாண பல்கலைக்கழக திட்டமிடல் சமூகமும் இணைந்து செயலாற்ற ஆரம்பித்துள்ளன.

இதன் முயற்கட்ட முயற்சியாக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை புத்தூர் நிலாவரைப் பகுதியிலேயே ஏராளமான பாதீனியச் செடிகள் பக்குவமாக அகற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் பெரும்பாலான பொது இடங்களில் பாதீனிய செடியின் பரம்பல் அதிகரித்துக்காணப்படுகின்றது. இந்நிலையில் இதனை அகற்றுவதற்கான முயற்சியாக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திட்டமிடல் மாணவர் சமூகத்தின் உதவியை அச் சமூகத்தின் பெரும்பொருளாளரும் விரிவுரையாளருமான பிரதிபராஜா ஊடாக நாடியிருந்தார்.

இந் நிலையில் வலிகாமம் கிழக்குப் பிர தேச சபையின் எல்லைக்குள் இருக்கின்ற பாதீனியத்தை ஒழிப்பியை மாணவர்களும் விருப்பம் தெரிவித்திருந்தனர். இதன் பின்னர் உரிய முறைப்படி பீடாதிபதிகள், யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர் ஆகியோரின் வரவேற்புடனேயே இச் செயற்றிட்டத்தில் மாணவர்கள் பங்கெடுத்துள்ளனர்.

இச் செயற்றிட்டத்தை எதிர்காலத்தில் தொடர்ந்து முன்னெடுப்பதற்கான முயற்சிகளையும் வலிகாமம் கிழக்குப்பிரதேச சபையின் தவிசாளரும் யாழ்பல்கலைக் கழக திட்டமிடல் சமூகத்தினரும் முன்னெடுக்கவுள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற பாதீனிய ஒழிப்பில் சுமார் 86 பல்கலைக் கழக மாணவ மாணவியரும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் உறுப்பினர்கள், பிரதேச சபையின் அதிகாரிகள், பணியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பித்தக்கது.

சத்தியலிங்கத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம்

# விளையாட்டுக் கழகங்களுக்கு சீருடைகள் உபகரணங்கள் நேற்றுமுன்தினம் வழங்கல்






வடக்கு மாகாணசபையின் முன்னாள் சுகாதார அமைச்சரும் மாகாண சபை உறுப்பினருமாகிய மருத்துவர் ப.சத்தியலிங்கத்தால் விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு வீரர்களுக்கான சீருடைகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

உறுப்பினரின் 2018ம் ஆண்டுக்கான நிதியொதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களே வழங்கப்பட்டன. வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் ஈச்சங்குளம் வட்டார உறுப்பினர் பொ.மங்களநாதன் தலைமையில் கோதண்டர் நொச்சிக்குளத்தில் நடைபெற்ற நிகழ்வில் ஈச்சங்குளம் விநாயகர் விளையாட்டுக் கழகம், மறவங்குளம் விடிவெள்ளி விளையாட்டுக் கழகம், கோதண்டர் நொச்சிக்குளம் மலர்மகள் விளையாட்டுக்கழகம் என்பவற்றுக்கே மேற்படி பொருள்கள் விநியோகிக்கப்பட்டன. (இ)

# பண்டத்தரிப்பில் நூல் அறிமுக நிகழ்வு







பண்டத்தரிப்பு, ஓக.08


தோழர் சி. கா. செந்திவேல் அவர்களால் எழுதப்பட்டு கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வெளியிட்டு வைக்கப்பட்ட இலங்கை இன முரண்பாட்டின் முழுமையான பரிமாணத்தைக் காட்டும், இன விடுதலைப் போரின் இன்னுமொரு பக்கத்தையும் சொல்லும் அரசியல் பகுப்பாய்வு விமர்சன நூலான வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை நூலின் 12 ஆவது அறிமுக நிகழ்வு நாளை வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் காலையடி, பண்டத்தரிப்பு என்ற முகவரியில் அமைந்துள்ள மறுமலர்ச்சி மன்ற மண்டபத்தில் மூத்த அரசியல் செயற்பாட்டாளரான மு.தியாகராஜா தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் அறிமுக உரையை எழுத்தாளரும் சட்டத்தரணியுமான சோ.தேவராஜா, நூல் மதிப்பீட்டுரைகளை ஓய்வு நிலை அதிபர்களான என். பாலசந்திரன், கெ.ஜெகநாதன் ஆகியோரும் கருத்துரைகளை காரைநகர் சமூக மேம்பாட்டுக் கழகத் தலைவர் கி. கோவிந்தராஜனும் சுழிபுரம் சமூக மேம்பாட்டு; இணையத்தின் தலைவர் க.புஸ்பராஜாவும் ஏற்புரையை நூல் ஆசிரியர் சி.கா.செந்திவேல் அவர்களும் ஆற்றவுள்ள னர்.

ஆர்வலர்கள் அனைவரையும் இந் நூல் அறிமுக நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு புதிய நீதிவெளியீட்டகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (இ)



# அணு ஆயுத ஒழிப்பு சாத்தியமா?



ஓகஸ்ட் 9, 1945. ஜப்பானின் நாகசாகியில் அமெரிக்கா அணுகுண்டு வீசிய தினம். ஓகஸ்ட் 6 இல் ஹிரோஷிமா மீது அணுகுண்டு வீசி லட்சக்கணக்கானோரைக் கொன்றுகுவித்த அமெரிக்கா, அந்தச் செயலுக்குத் துளியும் குற்ற உணர்ச்சி இல்லாமல் அடுத்த மூன்றாவது நாளில் நாகசாகியை அழித்தது. மனிதகுலம் கண்டிராத அந்த அழிவுக்குப் பின்னர், 23 ஆண்டுகாலம் கழித்து, 1968 ஜூலை 1 இல், அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் கையெழுத்துக்காக முன்வைக்கப்பட்டது.

1970 மார்ச் 6 இல் அமுலுக்கு வந்தது. ஆனால், அணு ஆயுதங்கள் விஷயத்தில் ஆதிக்கம் செலுத்தும் அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட ஐந்து நாடுகளின் செயல்பாடுகள், இந்த ஒப்பந்தத்தின் நோக்கம் நிறைவேறவிடாமல் செய்கின்றன என்பதுதான் கவனிக்க வேண்டிய விஷயம்!

இந்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்த போது ஆச்சரியத்தக்க வகையில் 191 நாடுகள் இதில் கையெழுத்திட்டிருந்தன. அணு ஆயுத ஒழிப்பில் மும்முரமாக இருந்த, இருக்கின்ற இந்தியா இதில் கையெழுத்திடவில்லை.

ஐ.நா பாதுகாப்பு கவுன்ஸிலின் நிரந்தர உறுப்பு நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன்,



பிரான்ஸ், சீனா தவிர இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல் ஆகிய நாடுகளும் தற்போது அணு ஆயுதம் வைத்திருக்கின்றன எனக் கருதப்படுகிறது. 2003 இல் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்திலிருந்து வெளியேறிய வட கொரியாவிடம் அணு ஆயுதங்கள் இருக்கின்றமை வெளிப்படையாகத் தெரிந்த விஷயம்.

**என்ன தான் பயன்?**

இந்த ஒப்பந்தத்தின் நோக்கங்கள்:

1. அணு ஆயுதப் பரவலைத் தடைசெய்வது
2. அமைதி நோக்கங்களுக்கான அணு ஆராய்ச்சியில் ஒத்துழைப்பு வழங்குவது,
3. முற்றிலுமாக அணு ஆயுதங்களை ஒழிப்பது. 1970 இல் இந்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்த பிறகுதான் வட கொரியா, இஸ்ரேல், தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் அணு ஆயுத நாடுகளாயின. இவற்றில் தென்னாபிரிக்கா நிறவெறி அரசு நீக்கப்பட்டதும் அணு ஆயுதங்களைக் கைகழுவிவிட்டது.

இஸ்ரேலிடம் அணு ஆயுதங்கள் இருப்பது உலகத்துக்கே தெரிந்தாலும் அதிகாரபூர்வமாக அந்நாடு இன்னும் ஒப்புக்கொள்ளவில்லை. அமைதிக்கான அணு ஆராய்ச்சியில் ஒத்துழைப்பு என்பது நடைமுறையில் எப்படி இருக்கிறது? மேற்கத்திய நாடுகள் வளரும் நாடுகளுக்கு அணு உலைகளை விற்கத் தங்களது பன்னாட்டு நிறுவனங்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தருகின்றன. அந்த அளவில்தான் ஒப்பந்தத்தின் இரண்டாவது நோக்கம் இருக்கிறது.

கடைசியாக - முழுமையான அணு ஆயுத ஒழிப்பு. இது எந்த அளவில் சாத்தியம் என்று பார்ப்போம். அதிக எண்ணிக்கையில் அணு ஆயுதங்களைக் கொண்டிருக்கும் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரிட்டன், பிரான்ஸ் நாடுகள்தான் இதனை முதலில் ஒழிக்க வேண்டும். ஆனால், அந்நாடுகள் அதற்குத் தயாராக இல்லை. சொல்லப்போனால், இந்த ஐந்து நாடுகள்தான் பிற நாடுகளுக்குப் பெரிய அளவில் ஆயுத உற்பத்தியும் ஏற்றுமதியும் செய்கின்றன.

ஆயுத ஏற்றுமதிக்காக உலகையே பதற்றத்தில் வைத்திருக்கும் வகையில் போட்டி போட்டுக்கொண்டு ஆயுத விற்பனை செய்வதால், பல நாடுகள் தங்கள் அண்டை நாடுகளுக்கு இணையாக ஆயுதங்களுக்குச் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் வேறு. பாதுகாப்பு விஷயத்தில் அதிக நிதியை ஒதுக்குவதால், வளர்ச்சித் திட்டங்களுக்குப் போதிய நிதி ஒதுக்க முடியாமல் அந்நாடுகள் திணறுகின்றன.

**அமெரிக்காவின் நிலைப்பாடு**

தென் கொரியாவில் அமெரிக்கா அளித்து வரும் ராணுவரீதியான ஒத்துழைப்பால், அச்சமடைந்த வட கொரியா, ஏவுகணைகளையும் அணு ஆயுதத்தையும் உற்பத்திசெய்தது. சமீபகாலமாக, அணு ஆயுத சோதனைகள், ஏவுகணை சோதனைகள் மூலம், தென்கொரியாவுக்கு மட்டுமல்ல, அமெரிக்காவுக்கும் நேரடியாக மிரட்டல் விடுத்தது வட கொரியா.

ஆனால், வட கொரியா மீது அமெரிக்காவால் ராணுவ நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை. மாறாக, வட கொரியாவுடன் நல்லுறவை ஏற்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா இறங்கியது. காரணம், தென் கொரியா மீதும் ஜப்பான் மீதும் அணு ஆயுதங்களை வீசப்போவதாக வட கொரியா மிரட்டினாலே அமெரிக்கா பணிந்து விடும். பாகிஸ்தான் விஷயத்திலும் இதே நிலைதான்.

வளர்ந்த நாடுகளின் அச்சுறுத்தலின் காரணமாக, அணு ஆயுதங்களைத் தங்கள் தற்காப்புக்காக உருவாக்கும் நிலைக்குச் சில நாடுகள் தள்ளப்பட்டன என்பதை மறுக்க முடியாது. இந்தச் சூழலில், அணு ஆயுதப் பரவலைத் தடுக்கும் முயற்சிகள் தொடர்ந்து பின்னடைவையே சந்தித்து வருகின்றன!

-ஸ்ரீ அருண்குமார்.

வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரியில்

# பெண் சாரணியை சிறுதோழர் கூட்ட விடுமுறை நிகழ்வு

இலங்கை பெண் சாரணிய சிறு தோழர் கூட்ட விடுமுறை நிகழ்வுகள் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பங்கர் மண்டபத்தில் நடைபெற்று வருகின்றன. இன்று புதன்கிழமை மூன்றாம் நாள் நிகழ்வுகள் இடம்பெறும்.

யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் வண.கலாநிதி டி.எஸ். சொலமனின் ஆசியுடன் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

நிகழ்வின் அறிமுக உரையை திருமதி ஜே.ஜே. மித்திரரஞ்சன் ஆற்றினார். நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு "Bon fire" இடம்பெற்றது.

இன்றைய நிகழ்வு சிறுதோழர் தலைவி வனராணி செல்வி ஜெயஜோதி கணேசனின் கலை ஒழுங்கமைப்புடன் நடைபெறுகின்றது.

பாசறை அனுமதிப்பத்திர உரித்தாளர் திருமதி கி.சிவராஜா இந்தப் பாசறையை வழி நடத்துகிறார் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ









இலங்கை பெண் சாரணியை சிறுதோழர் கூட்டத்தில் சாரணிய ஆசிரியர்கள், சாரணிய மாணவர்கள், பிரதம விருந்தினர்கள் ஆகியோர் பங்கு பற்றி வருகின்றனர்.

நிகழ்வில் சில காட்சிகளை இங்கு காணலாம்.

# விடுகதைகளும் விடைகளும்

1. மணம் இல்லாத மல்லிகை மாலையில் மலரும் அது என்ன?
தீபம்
2. அந்திவரும் நேரம், அவளும் வரும் நேரும் அது என்ன?
நிலா
3. மண்ணுக்குள் இருக்கும், மங்கைக்கு அழகு தரும். அது என்ன?
மஞ்சள்
4. இரவும் பகலும் ஓய்வு இல்லை, படுத்தால் எழுப்ப ஆள் இல்லை அது என்ன?
இதயம்
5. உடம்பெல்லாம் சிவப்பு, அதன் குடுமி பச்சை அது என்ன?
தக்காளி
6. ஓயாமல் இரையும் இயந்திரமல்ல, உருண்டோடி வரும் பந்து அல்ல. அது என்ன?
கடல்
7. சிறு தூசி விழுந்ததும் குளமே கலங்கியது. அது என்ன?
கண்
8. மழை காலத்தில் பிடிப்பான் அவன் யார்?
காளான்
9. எத்தனை தரம் சுற்றினாலும் தலை சுற்றாது, அது என்ன?
மின்விசிறி
10. வீட்டிலிருப்பான் காவலாலி, வெளியில் சுற்று வான் அவன் கூட்டாளி, அவர்கள் யார்?
பூட்டும் திறப்பும்
11. காய்க்கும் பூக்கும் கலகலக்கும் காகம் இருக்கக் கொப்பில்லை.
நெல்லு
12. கத்தி போல் இலை இருக்கும். கவரிமான் பூ பூக்கும் தின்ன பழம் கொடுக்கும். தின்னாத காய் கொடுக்கும்
வேம்பு

# துணிகளில் சாயம் வெளுக்கிறதா?





நாம் நிறைய பணம் கொடுத்து, மனதுக்குப் பிடித்தது போல் வாங்கி ஆசை ஆசையாய் சில நாள்கள் அணிந்திருப்போம். அப்படி மனதுக்குப் பிடித்த சில ஆடைகள் ஓரிரு முறை துவைத்த உடனேயே நிறம் மங்கி, வெளுக்க ஆரம்பித்து விடும். அப்படி உங்களுக்கு பிடித்த நல்ல ஆடை நிறம் மங்காமல் இருக்க வேண்டுமானால் என்ன செய்யலாம்?

துணிகளில் சாயம் வெளுக்கிறதா? இயற்கையான முறையில் நாமே தடுக்கலாம். துணிகள் நாம் அணியும்போது கிழிவதை விட சலவை செய்யும்போது கிழிந்து போக வாய்ப்புகள் அதிகம். பரப்புகளில் மோதல்கள் ஏற்படுவதால் மேற்பரப்பு இழைகள் (பைபர்) கிழிந்து பரப்பு மங்கியது போல் தோற்றமளிக்கிறது.

காலம் செல்ல செல்ல அதுவும் சாயமிழந்து வெளுக்கிறது. உட்புறமாக திருப்பி துவைக்கவும் கறுப்பு அல்லது அடர்ந்த நிறமுள்ள துணிகளை துவைக்கும்போது, அவற்றை உட்புறமாக திருப்பி துவைப்பது முக்கியம். தூசு படிந்து அழுக்கு வருவதை நினைத்து கவலை பட வேண்டாம். அது தானாக சுத்தமாகி விடும். துணிகள் வெளுத்துப்போகாமல் தடுப்பதில் இது தான் முதல் படி.

உப்புத் துவைக்கும்போது ஒரு தேக்கரண்டி உப்பு சேர்ப்பதால் துணி உலர்ந்து டிரையரில் இருந்து வரும் போது வண்ண மயமாக வரும். உப்பில் உள்ள குளோரைட்துணியில் நிறம் அப்பிக்கொள்ள உதவும். உங்கள் துணிகளில் இதை முயற்சி செய்து பார்க்கவும்.

கரு மிளகு: சலவையில் உள்ள உங்கள் துணிகளுக்கு கொஞ்சம் கருமிளகு சேர்த்து வண்ணங்களை தக்க வைக்கலாம். மிளகின் துகள்கள் துணிகளில் ஒட்டிக் கொள்வதை பற்றி கவலை பட வேண்டாம். அலசும்போது அவை போய்விடும்.

# வாட்ஸ் அப் ட்ரெண்டிங்....

**ஏன் அண்ணை அவனைப் போட்டு அடிக்கிறீங்க...?**
**சீனி வாங்கிட்டு வீட்டுக்கு வந்து பார்த்தா 100 கிராம் குறைவா இருக்கு ஏன்டான்னு கேட்க...**




**நடந்தா சுகர் குறையும்ன்னு சொல்றான்...**

# ஆகா, ஓகோ...!



- **கால் கிலோ கோழிக்கறி வாங்க, ஏழு கேள்வி கேட்பது**
- **ஓசி சாப்பாடு என்றாலும் உப்பு அதிகம் என்பது**
- **மைசூர்பாவில் மைசூரைத் தேடுவது.**
- **தூங்கிறவங்களை எழுப்பி 'ஏழுரை மணி பஸ் எத்தனை மணிக்கு வரும்' என்று கேட்பது.**
- **வெயில் காலத்திலேயும் கோட், சூட் போட்டு வலம் வருவது.**



# மூளை இல்லாத கழுதை

அது ஓர் அடர்ந்த காடு. அந்த காட்டில் ஒரு வயதான சிங்கம் ஒன்று வாழ்ந்து வந்தது. வயதாகிவிட்ட காரணத்தால் அந்த சிங்கத்தினால் வேகமாக ஓடவும், வேட்டையாடவும் முடியவில்லை. அதனால சாப்பிட எதுவும் கிடைக்காமல் அந்த சிங்கம்ரொம்ப கஷ்டப்பட்டது.

சிங்கமும் எத்தனை நாட்கள் இப்படியே இருப்பது? சாப்பிடுவதற்கு ஏதாவது செய்தாகணுமே?, என்று யோசித்தது.

யோசித்துக்கொண்டு இருக்கும்பொழுது அந்த பாதையின் வழியே குள்ள நரி ஒன்று வந்துகொண்டிருந்தது. உடனடியா சிங்கமும் இந்த நரியைத் தவிர வேறு யாரும் இந்த மாதிரி வேலைக்குச் சரிபட்டுவர மாட்டார்கள் என்று நினைத்தது. சிங்கமும் உணவைச் சேகரித்துக் கொண்டு வர இந்த குள்ள நரியை உதவியாளனாக நியமிக்க முடிவுசெய்தது.

உடனே சிங்கம் நரியை வரவழைத்தது. இனிமேல் நீதான் என் மந்திரி. உன்னைக் கேட்டுதான் எதையும் செய்வேன் என்று சிங்கம் அந்த குள்ள நரியிடம் கூறியது.

நரியால் சிங்கத்தின் பேச்சை நம்ப முடியல. ராஜா, உங்களுக்கு மந்திரியா இருக்கறது என் அதிர்ஷ்டம், என்று நரி சிங்கத்திடம் கூறியது உனக்கே தெரியும், இந்தக் காட்டுக்கே நான்தான் ராஜா. ஒரு ராஜா உணவுக்காக மற்ற விலங்குகளின் பின்னாடி ஓடினா அது பார்க்கறதுக்கு நல்லாயிருக்குமா? அதனால, எனக்குத் தேவையான உணவை நீ எப்படியாவது ஏற்பாடு செய்யணும். அது தான் உன் முதல் வேலை, என்றது சிங்கம்.

நரியும் பயந்து போய் நின்றது. சிங்கத்துக்கு எப்படி நம்மால் சாப்பாடு போட முடியும் என்று, யோசித்து. சிங்கமும் அந்த நரியை விடவில்லை. நீ ஒரு நாளைக்கு ஒண்ணுன்னு தினமும் ஒரு விலங்கை எனக்காகக் கூப்பிட்டு வரணும். நீதான் கெட்டிக்காரனாச்சே. ரொம்ப சுலபமா செஞ்சிடுவேன்னு எனக்குத் தெரியும் என்று சிங்கம் நரியை புகழ்ந்து பேசியது. சிங்கத்தின் புகழ்ச்சிப்பேச்சில் மயங்கிய நரியும் ஒப்புக்கொண்டது.

சிங்கத்துக்காக உணவு தேடும் வேலையில் இறங்கியது நரி. அப்போது ஒரு கழுதை எதிரில் வந்தது. கழுதையிடம் போய், நண்பா, எங்கே ரொம்ப நாளா ஆளையே காணோம்? எங்க போயிட்ட? என்றது.

இங்கேயேதானே நான் சுத்திக்கிட்டு இருக்கேன்? என்ன விஷயம்? என்று கழுதை கேட்டது. நீ ரொம்ப அதிர்ஷ்டக்காரன். நம்ம காட்டின் சிங்க ராஜா உன்னை முதல் மந்திரியா தேர்ந்தெடுத்திருக்காரு என்றது.

ஐயோ எனக்கு சிங்கத்தைப் பார்த்தாலே பயம்பா. அவர் ஒரே அடியில் என்னைக் கொன்னு சாப்பிட்டிடுவாரு. அவர் எதுக்காக என்னை முதல் மந்திரியா தேர்வு செய்ய வேண்டும்? ஆளை விடு என்றது கழுதை.

பயப்படாதே. நீ மட்டும் முதன் மந்திரியா இருந்தால், உன் நிலைமை எங்கேயோ போயிடும். ராஜாவுக்கு அடுத்தபடியா நீதான். எல்லா விலங்குகளும் உனக்கு மரியாதை தரும். ஏதாவது காரியம் ஆகணும்னா உன் பின்னாடிதான் வருவாங்க என்றது நரி.

அப்பாவியான கழுதை, நரியின் பேச்சை உண்மை என நம்பியது. சிங்கத்தைப் பார்க்க நரியோட சென்றது. நரியும் கழுதையும் சிங்கத்தின் இருப்பிடத்தை அடைந்தன. சிங்கம் கழுதையைப் பார்த்துச் சிரிச்சுக்கிட்டே, வா நண்பா. இன்று முதல் நீ தான் என்னோட முதல் மந்திரி என்று கூறியது.

கழுதையும் மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்தது. வெட்கத்துடன் தலை குனிந்தபடி சிங்கத்துக்குப் அருகில் வந்து நின்றது. சிங்கம் அதன் தலையில் ஓங்கி ஒரு அடி அடித்தது.. கழுதை அந்த நிமிடமே உயிரை விட்டது.

சிங்கம் கழுதையைச் சாப்பிட ஆரம்பித்தது. மகாராஜா, கொஞ்சம் பொறுங்க. என்னதான் பசியா இருந்தாலும் ஒரு ராஜா குளிக்காம சாப்பிடக்கூடாது இல்லையா? என்று சிங்கத்திடம் நரி கூறியது. சிங்கமும் அதை ஒப்புக்கிட்டு குளிக்கப் போச்சு.

நரி கழுதையின் உடலைப் பார்த்தது. அதற்கும் ஒரே பசி. கழுதையின் தலையைக் கிழிச்சு, மூளையை எடுத்துச் சாப்பிட்டது. குளித்துவிட்டு வந்த சிங்கம் கழுதையின் உடல் முன்பு போல் இல்லை என்று கண்டுபிடித்தது. கழுதையின் தலை ஏன் கிழிந்து உள்ளது? உள்ளே ஒன்றுமே இல்லையே? என்று சிங்கம் கேட்டது.

என்ன மகாராஜா! உங்களுக்குத் தெரியாதா? கழுதைகளுக்கு எல்லாம் மூளையே கிடையாது என்று நரி சிங்கத்திடம் கூறியது.

சிங்கம் நரியை நம்ப வில்லை. அது எப்படி மூளை இல்லாம இருக்கும்? பொய் சொல்லாதே என்று சிங்கம் கேட்டது. கழுதைக்கு மூளை இருந்திருந்தால் என்கூட வந்திருக்குமா? என்று நரி சிங்கத்திடம் கேட்டது.

நரி சொல்வது சரி என்று நம்பி சிங்கமும் அமைதியாகியது.

# நீதிச் சேவையுடன் ஏனைய துறைகளை எவரும் ஒப்பிட முடியாது: அமைச்சர் மங்கள



நீதிபதிகள் மற்றும் சட்ட மா அதிபர் திணைக்கள அதிகாரிகளின் சம்பள அதிகரிப்புக்கு சமாந்தரமாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளங்களும் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை நிதி மற்றும்வெகுஜனஊடகத்துறைஅமைச்சர் மங்கள சமரவீர மறுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்–

நீதித்துறையுடன் தொடர்புபட்ட நீதிபதிகள், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சட்ட வரைஞர் திணைக்களம் ஆகியன தனித்துவமான சேவைகளாகக் கருதி அவர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்பட்டன.

இந்தத்திணைக்களங்களில்பணியாற்றுபவர்கள் தனியார் துறையில் பணியாற்றினால் போதுமான வருமானத்தை ஈட்டுபவர்களாக இருப்பர். எனவே அவர்களை இந்த சேவையில் தொடரச் செய்வதை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் துறைகளை தனிப்பட்ட சேவைகளாகக் கருதி சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டது.

இதனைப் பயன்படுத்தி ஏனைய அரசதுறை அதிகாரிகள் சம்பள அதிகரிப்பைக் கோர முடியாது .

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் சம்பளங்கள் நீதிச்சேவை அதிகாரிகளுக்கு சமாந்தரமாகஅதிகரிக்கப்படவேண்டும். என 2006 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை சுட்டிக்காட்டி சம்பள உயர்வுகோரி வருகின்றனர். எனினும், ஜனவரி 9 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்துக்கு அமைய நாடாளுமன்றத்தின் இந்தப் பிரேரணை செல்லுபடியாகாது எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# சிங்கப்பூர் ஒப்பந்தத்தை மீள் பரிசீலனை செய்ய வேண்டும்

## மஹிந்த பகிரங்க அறிவிப்பு



சிங்கப்பூர் ஒப்பந்தத்தை அரசாங்கம் மீள்பரிசீலனைசெய்ய வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷகேட்டுக் கொண்டுள்ளார.

அநுராதபுரம் சமய வழிபாட்டுத் தலங்களுக்கு மேற்கொண்ட விஜயத்தின் பின்னர் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இதனைக் கூறினார்.

சிங்கப்பூர் ஒப்பந்தத்தினால் இலங்கைக்குப் பாதகமான விளைவுகள் ஏற்படலாம் என்றும் அதனை மீள் பரிசீலனை செய்வது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# எம்பிலிப்பிட்டி கல்வி வலய பாடசாலைகளின் புதிய கட்டடங்கள் மாணவர்களிடம் கையளிப்பு!

அரசு அமுலாக்கியுள்ள அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற வேலைத்திட்டத்தின் கீழ் எம்பிலிப்பிட்டி கல்வி வலய பாடசாலைகளில் நிர்மாணிக்கப்பட்ட ஆறு புதிய கட்டடங்கள் சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளன.


இவற்றின் திறப்பு விழா ஆளுநர் நிலுகா ஏக்கநாயக்க தலைமையில் இடம்பெற்றது.

கல்வி அமைச்சு 15 கோடி ரூபா செலவில் பாடசாலைக் கட்டடங்களை நிர்மாணித்திருந்தது.

நகர்ப்புற பிரபல பாடசாலைகளில் நிலவும் இடநெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற வேலைத்திட்டம் அமுலாக்கப்படுகிறது.

இதன் கீழ் பின்தங்கிய மற்றும் மிகவும் பின்தங்கிய பாடசாலைகளில் பௌதீக ஆளணி வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

# சீகிரியக் குன்று சார்ந்த கேபிள் கார் திட்டம்;' தமக்கு தொடர்பு ஏதும் இல்லை அகிலவிராஜ்!





கொழும்பு, ஓக.08

சீகிரிமலைக்குன்று சார்ந்ததாக கேபிள் கார் திட்டத்தை ஸ்தாபிப்பது பற்றித் தாம் எதுவிதயோசனையையோ, திட்டத்தையோ சமர்ப்பிக்கவில்லை என யுனெஸ்கோ அமைப்பிற்கான இலங்கைத் தலைவர் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

சமகாலத்தில் மத்திய கலாசார நிதியம், தொல்பொருள் ஆராய்ச்சி ஆய்வுத் திணைக்களம் ஆகியவற்றுக் குப் பொறுப்பான அமைச்சராக கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ கடமையாற்றுகிறார்.

எனவே, கேபிள் கார் விவகாரத்தில் அவரே தீர்மானங்களை எடுப்பார் என கல்வியமைச்சர் தெரிவித்தார்.

கேபிள்கார் திட்டத்தை ஸ்தாபிக்கத்திட்டமிட்டுள்ளதாகவும், இது பற்றி சீனக் குழுவொன்று ஆராய்ந்ததாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இது பற்றி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ விசாரணை நடத்தி உண்மைகளை வெளிப்படுத்துவார் என நம்புகிறேன் என் றும் குறிப்பிட்டார்.

இலங்கையில் உள்ள மரபுரிமை ஸ்தலங்களுக்கு பாதிப்பு ஏற்படும் விதத்திலான எந்தவொரு செயற்பாட்டிற்கும் தாம் இடமளிக்கப்போவதில்லை என கல்வி அமைச்சர் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சை; விசேட பொலிஸ் பாதுகாப்பு!

கொழும்பு, ஓக.08

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நடைபெறும் பரீட்சை நிலையங்களுக்காக விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

பரீட்சை ஒருங்கிணைப்பு நிலையங்களுக்கும், பிரதேச வினாத்தாள் சேகரிப்பு நிலையங்களுக்கும் தலா மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

ஒவ்வொரு பரீட்சை நிலையத்தைச் சார்ந்ததாகவும் பொலிஸ் ரோந்து சேவைகளும் இடம்பெறுகின்றன. அவ்வாறே வினாத்தாள்களையும், விடைத்தாள்களையும் ஏற்றிச் செல்லும் வாகனங்களுடனும் தலா இரண்டு பொலிஸ் கொன்ஸ்டபிள் கள் அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் வடமாகாண அமைச்சர்கள் இருவர் வெளிநடப்பு!



மன்னார், ஒக.08

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற போது வடமாகாண அமைச்சர்கள் இருவர் அந்தக் கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதில் வடமாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன் மற்றும் வடக்கு விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன் ஆகியோரே வெளிநடப்புச் செய்துள்ளனர்.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பல தரப் பட்டவர்களுக்கும் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருந்த போதும், இந்த இரு அமைச்சர்களுக்கும் ஆசனங்கள் ஒதுக்கப்படவில்லை.

இந்த நிலையில், இந்த இரு அமைச்சர்களும் குறித்த கூட்டத்தில்இருந்துவெளிநடப்புசெய்துள்ளனர்எனத்தெரியவருகின்றது மன்னார் மாவட்ட அரச அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் ஏற்பாட்டில் இணைத் தலைவர்களான வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன், அமைச்சர் ரிஷாத் பதியுதீன், பிரதி அமைச்சர் கே.கே.மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், ஆகியோரின் இணைத்தலைமையில் குறித்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எம்பிக்கள் கொடுப்பனவு அதிகரிப்புத் தொடர்பில் நிதி அமைச்சரின் கருத்திற்கு வாசுதேவ பாராட்டு!



நாடாளுமன்ற உறுப்பினர்களது கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்காக திறைசேரியில் இருந்து நிதி வழங்கப்போவதில்லை என அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்த கருத்துக்களை நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார வரவேற்றுள்ளார்.

நிதிஅமைச்சருடன் கருத்து முரண்பாடுகள் இருந்தாலும், அவரது கருத்தை நான் வரவேற்கிறேன் என்றும் வாசுதேவ நாணயக்கார அறிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றினார்.

நீதிச் சேவை உத்தியோகத்தர்களது கொடுப்பனவு அதிகரிக்கப்படும் போது நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளமும் இயல்பாக அதிகரிக்க வேண்டும் என்ற யோசனை 2006ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அந்த யோசனையை ரத்துச் செய்ய வழிவகுக்கும் பிரேரணையை கூட்டு எதிர்க்கட்சி சமர்ப்பிக்கம் என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டார்.

# விபத்தில் சிக்கி சிகிச்சை பெற்று வந்த நபர் ஐந்தாவது நாளான நேற்று உயிரிழப்பு!

கிண்ணியா,ஒக.08

கிண்ணியா, பைசல் நகர் சந்தி ஜும்ஆ பள்ளிவாசலுக்கு முன்னால் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த நபரொருவர் நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை இந்த நபரை, மண் ஏற்றும் டிப்பர் வாகனமொன்றுமோதியதால்நேர்ந்த விபத்தில், அவர் படுகாயமடைந்திருந்தார்.

இதனையடுத்து அவர் கிண்ணியாதளவைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே ஐந்தாவது நாளான நேற்று சீனக்குடா பகுதியைச் சேர்ந்த ஏ.சித்தீக் (வயது 43) எனும் இந்த நபர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் கிண்ணியா நகரசபையின் ஊழியராக கடமையாற்றி வந்தவர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், டிப்பர் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மகப்பேறு விடுப்புக்கு பின்னர் மீண்டும் நாடாளுமன்றில் நியூஸிலாந்து பிரதமர்



வெலிங்டன், ஒக.08

நியூஸிலாந்து பிரதமர் ஜெசின்டா ஆர்டென் மகப்பேறு விடுப்புக்கு பின்னர் முதன்முறையாக நாடாளுமன்றத்துக்குச் சென்று தனது பணிகளை கவனித்துக் கொண்ட துணை பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

நியூஸிலாந்து நாட்டின் பிரதமராக பதவி வகிப்பவர் ஜெசின்டா ஆர்டென் (வயது 38). இவரது கணவர் க்ளார்க் கேஃபோர்ட்.

26-10-2017 அன்று நியூஸிலாந்து நாட்டு பிரதமராகப் பதவியேற்ற சில வாரங்களிலேயே, அர்டர்ன் கருவுற்றிருப்பது தெரியவந்தது. அதைத் தொடர்ந்து எட்டு மாதங்கள் முடிந்த நிலையில், மகப்பேறு விடுப்பில் இருந்த அர்டர்ன், ஆக்லாந்து நகரில் உள்ள தனது பூர்வீக இல்லத்தில் கடந்த ஜுன் 21 ஆம் திகதி அழகான பெண் குழந்தையை பெற்றெடுத்தார்.

'நீவ் தே அரோஹா' என்று பெயர் சூட்டியுள்ளனர். குழந்தை பிறந்து ஆறு வாரங்களான நிலையில், மகப்பேறு விடுப்பு முடிந்து கடந்த வியாழக்கிழமை ஜெசின்டா தம்பதியர் தலைநகர் வெலிங்டன் வந்தடைந்தனர்.

வெலிங்டன் விமான நிலையத்தில் பேட்டியளித்த ஜெசின்டா, 'என் வேலைக்காக என் குழந்தையையோ, வீட்டுக்காக அலுவலகத்தையோ நிச்சயம் விட்டுக்கொடுக்க மாட்டேன்.

என் வாழ்நாளிலேயே வேகமாகக் கடந்த ஆறு வாரங்கள் இவைதான். என் குழந்தையின் தாய் என்ற பொறுப்புடன், சுமார் ஐம்பது லட்சம் மக்கள் வாழும் இந்த நாட்டையும் கவனித்துக் கொள்வது என்பது மிகப்பெரிய சவாலாக இருக்கப்போகிறது.

என் கடமைகளைத் தவறாமல், எந்தவிதமான கவனச் சிதறலும் இல்லாமல் செய்ய வேண்டும் என்பதையும் நன்கு அறிவேன். உங்கள் எல்லாருடைய உறுதுணையும் இருந்தால், நிச்சயம் என்னால் சிறப்பாகப் பணியாற்ற முடியும் என நம்புகிறேன் எனக் குறிப்பிட்டார்.

அன்றிலிருந்தே தனது அலுவல்களை அவர் கவனிக்கத் தொடங்கினார்.

இந்நிலையில், மகப்பேறு விடுப்புக்கு பின்னர் முதன்முறையாக பிரதமர் ஜெசின்டா நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்துக்கு வந்தார். நாடாளுமன்ற மாடத்தில் அவர் நுழைந்தபோது சக அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்கள் கரவொலியால் மகிழ்ச்சியுடன் அவரை வரவேற்றனர்.

பின்னர் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்துக்கு தலைமை தாங்கிய அவர், மகப்பேற்று விடுப்பு காலத்தில் தனது பணிகளைக் கவனித்துகொண்ட துணை பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

உலகளவில், பிரதமர் பதவியில் இருக்கும்போதே குழந்தையை பெற்றெடுத்த இரண்டாவது பெண் ஜெசின்டா ஆர்டென் என்பது குறிப்பிடத்தக்கது. இவருக்கு முன்னர் பாகிஸ்தான் பிரதமர் மறைந்த பெனாசிர் பூட்டோ தனது பதவிக் காலத்தில் 1990 ஆம் ஆண்டு குழந்தை பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அலாஸ்காவில் சுற்றுலா விமானம் விபத்தில் சிக்கி 4 பேர் உயிரிழப்பு!



வொஷிங்டன், ஒக.08

அலாஸ்காவில் சுற்றுலா பயணிகளை ஏற்றிச்சென்ற சிறிய ரக விமானம் ஒன்று விழுந்து நொருங்கி விபத்துக்குள்ளானதில் 4 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவில் உள்ள அலாஸ்கா மாகாணத்தில் கடல் மட்டத்தில் இருந்து 20 ஆயிரம் அடி உயரத்தில் டேனலி தேசிய பூங்கா அமைந்துள்ளது. இங்குள்ள பனிப்படர்ந்த மலைப் பகுதிகளை சுற்றிப்பார்க்க உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் அதிகளவு வந்து செல்கின்றனர்.

இந்நிலையில், போலந்து நாட்டை சேர்ந்த 4 பேர் மற்றும் விமானி உட்பட 5 பேர், சிறிய ரக விமானம் ஒன்றில் டேனலி தேசிய பூங்கா நோக்கி பயணம் செய்தனர். ஆனால், அதிகளவிலான பனிப்பொழிவு மற்றும் மோசமான வானிலை காரணமாக கடல் மட்டத்தில் இருந்து 11 ஆயிரம் அடி உயரத்தில் விமானம் பறந்துகொண்டிருந்த போது திடீரென விபத்துக்குள்ளானது.

இதில், போலந்து நாட்டைச் சேர்ந்த 4 சுற்றுலா பயணிகளும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், விமானியை பற்றிய தகவல் ஏதும் கிடைக்காத நிலையில் அவரும் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

விபத்து நிகழ்ந்த பகுதியில் வெப்பநிலை மைனஸ் 17 டிகிரிக்கும் கீழ் இருப்பதால் மீட்புப் பணிகளில் துரிதமாகச் செயல்படுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பங்களாதேஷின் முன்னாள் பிரதமருக்கு பஸ் எரிப்பு வழக்கில் 6 மாதங்கள் பிணை!



டாக்கா, ஒக.08

பங்களாதேஷில் 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற வன்முறைக்கு தூண்டுகோலாக இருந்தார் என கைது செய்யப்பட்ட முன்னாள் பிரதமர் கலிதா ஷியாவுக்கு 6 மாதங்கள் பிணை வழங்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷில் 2015 ஆம் ஆண்டு அரசுக்கு எதிராக மிகப் பெரிய வன்முறை வெடித்தது. இந்த வன்முறையின் போது அடையாளம் தெரியாத மர்ம நபர்களால் பஸ் மீது பெற்றோல் குண்டு வீசப்பட்டது. இந்த விபத்தில் சுமார் 8 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், 20 க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

இதையடுத்து இந்த வன்முறை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதில் முன்னாள் பிரதமர் கலிதா ஷியா மீது வன்முறையை தூண்டினார் என குற்றம் சாட்டப்பட்டு அவர் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில், குமில்லா சிறப்பு நீதிமன்றத்தில் கலிதா ஷியா சார்பில் பிணை கோரி மனு அளிக்கப்பட்டது. இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள், 6 மாத இடைக்கால பிணை அளித்து உத்தரவிட்டுள்ளனர்.

(கு)

## ஹிரோஷிமாவில் அணுகுண்டு வீசப்பட்டதன் 73 ஆம் ஆண்டு நினைவுநாள் அனுஷ்டிப்பு



டோக்கியோ, ஒக.08

இரண்டாம் உலகப்போரின் போது ஜப்பானின் ஹிரோஷிமா நகர் மீது அமெரிக்கா அணுகுண்டு வீசியதன் 73 ஆம் ஆண்டு நினைவு நாளில் அந்நாட்டின் பிரதமர் சின்சோ அபே பங்கேற்று மௌன அஞ்சலி செலுத்தினார்.

இரண்டாம் உலகப்போரின் போது அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா போன்ற நாடுகள் ஓர் அணியிலும், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் போன்ற நாடுகள் எதிரணியுமாக மோதிக்கொண்டன. அப்போது, அமெரிக்காவின் பியர்ல் துறைமுகம் மீது எதிர்பாராதவிதமாக ஜப்பான் குண்டுவீசி தாக்குதல் நடத்தியது. இதில் அமெரிக்க பாதுகாப்புப் படையினர் பலர் உயிரிழந்தனர்.

இதனால் ஆத்திரம் அடைந்த அமெரிக்கா, ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் ஒகஸ்ட் 6 ஆம் திகதி அமெரிக்க போர் விமானம் அணுகுண்டு வீசி அந்நகரை நிர்மூலமாக்கியது.

அணுகுண்டின் கதிர் வீச்சில் உடனடியாக ஆயிரக் கணக்கானோரும் அந்த ஆண்டின் இறுதிக்குள் ஒரு லட்சத்து நாற்பதாயிரம் பேரும் உயிரிழந்தனர். மனிதகுலத்துக்கு எதிரான இரக்கமற்ற அணுகுண்டுத் தாக்குதலின் 73ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி நேற்றுமுன்தினம் ஹிரோஷிமா நகரில் நடைபெற்றது.

இதில் ஹிரோஷிமா மேயர் கசுமி மட்சுய், ஜப்பான் பிரதமர் சின்சோ அபே, அணுகுண்டு வெடிப்பில் இருந்து தப்பி உயிர் பிழைத்தோர் உள்ளிட்ட ஐம்பதாயிரம்பேர் கலந்து கொண்டு மௌன அஞ்சலி செலுத்தினர்.

## நிலநடுக்கம் நடந்த வேளையிலும் கூட இமாம் நிலை குலையாமல் தொழுகை!

ஜகர்த்தா, ஒக.08

இந்தோனேசியாவில் 7 ரிக்டர் நிலநடுக்கம் ஏற்பட்டபோதும் மதவழிபாட்டில் ஒருமுகப்பாடு குலையாமல் ஒரு மசூதியின் இமாம் தொழுகை நடத்திய காட்சி வைரலாக பரவி வருகிறது.

பல்வேறு தீவுகளைக் கொண்ட இந்தோனேசியா நாடு அதிக அளவில் நிலநடுக்கம் ஏற்படும் நெருப்பு வளையப் பகுதியில் அமைந்துள்ளது. இதனால் இங்கு அடிக்கடி பூகம்பம் ஏற்பட்டு வருகிறது.

இந்நிலையில், சுமத்ராவை ஒட்டியுள்ள பாலி மற்றும் லம்பாக் தீவின் அருகே நேற்று முன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவுகோலில் 7 ஆக நிலநடுக்கம் பதிவானதாக அமெரிக்க புவிசார் ஆய்வு மையம் தெரிவித்தது.

இந்த நிலநடுக்கத்தால் அப்பகுதியில் இருந்த பல வீடுகளும், கட்டடங்களும் இடிந்து விழுந்தன. இதனால் மக்கள் அலறியடித்து கொண்டு தெருக்களில் தஞ்சம் புகுந்தனர். இடிபாடுகளில் சிக்கி 91பேர் பலியாகினர்.

இந்த நிலநடுக்கம் அருகில் உள்ள பாலி நகரத்திலும் உணரப்பட்டது. அப்போது அங்குள்ள மசூதிகளில் மாலை வேளை தொழுகை நடந்து கொண்டிருந்தது. நிலநடுக்கத்தால் அங்குள்ள ஒரு மசூதி கட்டடம் பெரிய அளவில் அதிர்ந்தது.



நிலநடுக்கம் போன்ற வேளைகளில் பாதியில் தொழுகையை முடித்துகொண்டு உயிரை பாதுகாத்துக் கொள்ளலாம் என ஒரு கருத்து உள்ளதால் அவருக்கு பின்னால்நின்று தொழுதவர்களில் பலர் உயிர் பயத்தில் அங்கிருந்து ஓட்டம் பிடித்தனர்.

ஆனால், இறைவணக்கமான தொழுகையில் ஒருமுகப்பட்டு இருக்கும் வேளையில் இதைப் பற்றி கவலைப்படாத அந்த மசூதியின் இமாம், நிலநடுக்கத்தால் தனது உடல் தள்ளாடி, தடுமாறிய வேளையிலும், பக்கவாட்டில் உள்ள சுவரின்மீது ஒருகையை தாங்கி படி, தொழுகைக்கு தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருந்தார்.

இதை அங்கிருந்த ஒருவர் செல்போன் மூலம் வீடியோவாக எடுத்து பேஸ்புக்கில் பதிவிட்டார். சிலமணி நேரத்தில் இந்த வீடியோவை உலகம் முழுவதிலும் உள்ள லட்சக்கணக்கான மக்கள் பார்த்து வியந்ததுடன், பலருக்கு பகிர்ந்து, அவரது பக்தியைப் புகழ்ந்து, பாராட்டுமழை பொழிந்து வருகின்றனர்.

# மெரினா கடற்கரையில் உடல்கள் அடக்கம் செய்து நினைவிடம் அமைக்கத் தடை கோரிய மனு வாபஸ்



வழக்கை தள்ளுபடி செய்தது உயர் நீதிமன்றம்

மெரினா கடற்கரையில் உடல்களை அடக்கம் செய்து நினைவிடம் அமைக்கத் தடை கோரிய மனுவை மனுதாரர் திரும்பப் பெற்றமையால் வழக்கைத் தள்ளுபடி செய்தது உயர் நீதிமன்றம்.

சென்னை அண்ணாநகரைச் சேர்ந்தவர் வி.காந்திமதி, இவர் பொதுநல மனு ஒன்றை சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். அதில் இறந்தவர்களின் உடலை பொது இடத்தில், குறிப்பாக மெரினா கடற்கரையில் அனுமதி பெற்றோ, பெறாமலோ புதைப்பது, எரிப்பது கூடாது என்று உத்தரவிடக் கோரியிருந்தார்.

அவரது பொதுநல மனுவில், மெரினா கடற்கரை தற்போது சுடுகாடாக மாறி வருவதால், சுற்றுச்சூழல் கடுமையாக பாதிக்கப்படும். குடியிருப்புப் பகுதிகளிலும், அதிக மக்கள் நடமாட்டம் உள்ள மெரினா கடற்கரையில் உடல்களைப் புதைப்பது பொதுமக்களுக்கு மிகப்பெரிய இடையூறை ஏற்படுத்துகிறது.

உடல்களைப் புதைப்பதற்கும், எரிப்பதற்கும் மாநகராட்சி சட்டவிதிகளின்படி, சென்னை மாநகராட்சி ஆணையர் தான் அனுமதி வழங்கவேண்டும்.

ஏற்கெனவே, மெரினா கடற்கரையில் அண்ணாதுரை, எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆகியோரது உடலைப் புதைத்து நினைவிடம் அமைக்கப்பட்டுள்ளது. இவர்கள் எல்லோரும் மறையும் போது முதல்வராக இருந்தவர்கள்.

இதற்கு மேலும், அங்கு வேறு யாராவது உடலை அடக்கம் செய்ய மாநகராட்சி ஆணையர் அனுமதி வழங்கினால், கண்டிப்பாக கடற்கரையில் உள்ள சுற்றுச்சூழலை அது அழித்து விடும்.

எனவே, சுடுகாடு அல்லாத பிற பகுதிகளில், உடல்களைப் புதைக்க வேண்டும் என்றால், அதற்கு விதிமுறைகளை உருவாக்கும்படி தலைமைச் செயலாளர், சென்னை மாநகராட்சி ஆணையர் ஆகியோருக்கு கடந்த ஜூலை 30 ஆம் திகதி மனு அனுப்பினேன்.

ஆனால் இதுவரை எந்தப் பதிலும் இல்லை. எனவே, பொது இடங்களில் உடல்களைப் புதைப்பதற்கும், எரிப்பதற்கும் விதிகளை உருவாக்க தமிழக அரசுக்கும், சென்னை மாநகராட்சிக்கும் உத்தரவிட வேண்டும். இனி மெரினா கடற்கரையில் யாருடைய உடலையும் புதைக்கவோ, எரிக்கவோ அனுமதிக்க மாநகராட்சி ஆணையருக்குத் தடை விதித்து உத்தரவிட வேண்டும்" என்று கோரியிருந்தார்.

இந்த மனு நேற்று பொறுப்பு தலைமை நீதிபதி ஹுலுவாடி ஜி. ரமேஷ், நீதிபதி எஸ்.எஸ்.சுந்தர் அமர்வில் விசாரணைக்கு பட்டியலிடப்பட்டு இருந்தது. ஆனால் வழக்கு விசாரணை தொடங்குவதற்கு முன்பான முறையீட்டு நேரத்தில் வழக்கறிஞர் காந்திமதி ஆஜராகி, சில காரணங்களுக்காக இந்த மனுவை வாபஸ் பெறுகிறேன் என்றும், அதற்கு நீதிமன்றம் அனுமதிக்கவேண்டும் என்றும் கோரிக்கை வைத்தார்.

அதனை ஏற்ற நீதிபதிகள், மெரினாவில் மேற்கொண்டு நினைவிடம் அமைக்கக் கூடாது என விதிமுறைகளை உருவாக்கக் கோரிய வழக்கை வாபஸ் பெற அனுமதித்து வழக்கைத் தள்ளுபடி செய்தனர்.

# கருணாநிதியின் நிலை மோசம்; தமிழகம் எங்கும் பெரும் பதற்றம்!!

## காவேரி மருத்துமனைக்கு படையெடுக்கும் தி.மு.க. தொண்டர்கள்



கலைஞர் கருணாநிதியின் உடல் நிலை மோசமடைந்துள்ள நிலையில், தமிழகம் எங்கும் பதற்ற நிலை காணப்படுகிறது. கலைஞரின் உடல் உறுப்புக்கள் செயழிழந்து வருகின்றன என அறிக்கை வெளியான நிலையில் தி.மு.க. தொண்டர்கள் காவேரி மருத்துவமனைக்கு படையெடுக்கத் தொடங்கியுள்ளனர். அதனால் பதற்றமான நிலை மட்டுமின்றி, பாதுகாப்பு நெருக்கடிகளும் தோன்றியுள்ளன என தகவல்கள் வெளியாகியுள்ளன.

உடல்நலக்குறைவின் காரணமாக தீவிர அரசியல் செயற்பாடுகளிலிருந்து விலகியிருந்த தி.மு.க. தலைவர்கலைஞருக்கு கடந்த மாதம் 27 ஆம் திகதியன்று திடீரென உடல் நலக் குறைவு ஏற்பட்ட காரணத்தினால் சென்னை ஆழ்வார் பேட்டை காவேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அங்கு அவருக்கு சிறுநீரக பாதையில் நோய்த்தொற்று ஏற்பட்டுள்ளதாகவும், மஞ்சள் காமாலைக்குரிய அறிகுறிகள் தென்படுவதாகவும் மருத்துவர்கள் குழு கண்டறிந்தமையை அடுத்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

அவ்வப்போது கலைஞரின் உடல் நிலையில் சற்றே மாறுதல்கள் ஏற்பட்டாலும், மருத் துவர்கள் குழு அவரை முழுமையாக கண்காணித்து வந்தது. மேலும், கலைஞர் உடல்நலம் குறித்து அவ் வப்போது அறிக்கைகளும் வெளியிட்டு வந்தது.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் மருத் துவமனை சார்பில் விடுக்கப்பட்ட அறிக்கையில் கலைஞர் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது எனவும், அடுத்த 24 மணிநேரம் கழித்தே அவரது உடல் நிலையை பொறுத்து சிகிச்சைகள் மேற்கொள் எப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கலைஞரின் உறவினர்கள், கட்சியின் முக்கிய தலைவர்கள், தொண்டர்கள் என அனைவரும் காவேரி மருத்துவமனைக்கு படை யெடுக்க துவங்கியதால் அப்பகுதியில் போக்குவரத்து மாற்றங்கள் மேற் கொள்ளப்பட்டன. காவல்துறையும் அடுத்த கட்ட ஆலோசனைகளை மேற்கொண்டனர்.

இந்நிலையில், பிரதமர் மோடியும் காவேரி மருத்துவமனைக்கு வரவுள்ள காரணத்தினால் பதற்றமான சூழல் தமிழகம் முழுவதும் நிரம்பியுள்ளது.

தி.மு.க. உடன்பிறப்புகள் எத்த கைய சூழலிலும் தமது கண்ணி யத்தை இழக்கக் கூடாது, கட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் வண்ணம் நடந்துகொள்ளக் கூடாதென சில தினங் களுக்கு முன்னர் ஸ்டாலின் அறிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# கருணாநிதியின் உடல்நிலை குறித்து நேரில் சென்று கேட்டறிந்தார் மத்திய அமைச்சர் நிதின் கட்கரி!




சென்னை காவிரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் தி.மு.க தலைவர் கருணாநிதியை சந்திக்க மத்திய அமைச்சர் நிதின் கட்கரி, தமிழிசை சவுந்திரராஜன் ஆகியோர் காவிரி மருத்துவமனைக்கு சென்றிருந்தனர்.

விமானம் மூலம் சென்னை சென்றடைந்த மத்திய அமைச்சர் நிதின் கட்கரி காவிரி மருத்துவமனைக்கு விரைந்தார். அவருடன் தமிழக பா.ஜ.க தலைவர் தமிழிசையும் காவிரி மருத்துவமனைக்கு சென்றிருந்தார் அங்கு சென்ற அவர்கள் காவிரி மருத்துவமனையில் இருந்த மு.க ஸ்டாலின் உள்ளிட்ட கருணாநிதியின் குடும்பத்தினரிடம் அவரது உடல்நிலைக் குறித்து கேட்டறிந்தனர்.

இதேவேளை, காவிரி மருத்துவமனையில் தொண்டர்களின் வருகை அதிகரித்துள்ளமையால் அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டு, பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

# சத்திஸ்கரில் நேற்றுத் தேடுதல்; 14 நக்சலைட்டுகள் சுட்டுக்கொலை

சத்திஸ்கர் மாநிலம், சுக்மா மாவட்டத்தில் நேற்று சிறப்பு படையினர் நடத்திய தேடுதல் வேட்டையில் நக்சலைட் இயக்கத்தை சேர்ந்த 14 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மேலாதிக்கவாதிகளின் அடக்குமுறைகளால் பாதிக்கப்படும் கீழ்த்தட்டு மக்களில் சிலர் இருவர்க்கத்துக்கும் இடையிலான இடைவெளியை குறைப்பதற்கு ஆயுத வன்முறையே சிறந்த தீர்வென கருதுகின்றனர்.

பல்லாண்டு காலமாக அரசிடம் போராடி பெறமுடியாத சில சலுகைகளையும் ஆயுதப் புரட்சியின்மூலம் அடைந்துவிட முடியும் என கருதும் இவர்கள் சத்திஸ்கர், ஒடிசா, ஆந்திரா, மணிப்பூர் உள்ளிட்ட சில மாநிலங்களில் நக்சலைட்களாகவும், மாவோயிஸ்ட்டுகளாகவும், நாடெங்கிலும் உள்ள காடு, மலைகளில் பதுங்கி வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களை வேட்டையாட தனிப்படை பிரிவினர் தொடர்ந்து தேடுதல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த படையினருக்கு துணையாக இந்தோ – திபெத்திய எல்லைப்படை மற்றும் மத்திய ரிசர்வ் போலீஸ் படையினரும் உடன் செல்வதுண்டு.

இந்நிலையில், சத்திஸ்கர் மாநிலம், சுக்மா மாவட்டத்தில் உள்ள வனப்பகுதியில் பாதுகாப்பு படையினருக்கும், நக்சலைட்டுகளுக்கும் இடையே நேற்றுக் காலை கடும் துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில் 14 நக்சலைட்டுக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சம்பவம் நடந்த இடத்தில் இருந்து ஏராளமான ஆயுதங்களை பறிமுதல் செய்த பொலிஸார் தொடர்ந்து தேடுல் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர்.

# புலிகள் இயக்கத்துக்கு எதிரான தடையை எதிர்த்து வைகோ வழக்குத் தொடர உரிமை இல்லை!

## சென்னை உயர்நீதிமன்றத்தில் மத்திய அரசு பதில் மனு தாக்கல்

விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து வைகோ வழக்கு தொடர உரிமை இல்லை என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் மத்திய அரசு பதில் மனு தாக்கல் செய்துள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கடந்த 1991 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட பின்னர், விடுதலைப் புலிகள் இயக்கத்தை மத்திய அரசு தடை செய்தது. இந்த தடையை 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை நீடிக்க, உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் தீர்ப்பாயத்தை மத்திய அரசு அமைக்கும்.

அந்த தீர்ப்பாயம், தமிழகம் உள்ளிட்ட பல மாநிலங்களில் விசாரணை நடத்தி, விடுதலைப்புலிகளால் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் உள்ளதா? இல்லையா? என்பதை ஆய்வு செய்து, தடையை நீடிப்பது குறித்து அறிக்கை தாக்கல் செய்யும். அதன்படி மத்திய அரசு இறுதி உத்தரவு பிறப்பிக்கும்.



இதன்படி, கடந்த 2014 ஆம் ஆண்டு நீதிபதி ஜி.பி.மிட்டல் தலை மையிலான தீர்ப்பாயம் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு விதிக்கப்பட்ட தடையை நீடிக்க உத்தரவிட்டது. இதன்படி விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு விதிக்கப்பட்ட தடையை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீடித்து மத்திய அரசு உத்தரவிட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ வழக்கு தொடர்ந் தார். நீண்டகாலமாக நிலு வையில் உள்ள இந்த வழக்கு, நீதிபதிகள் கே.கே.சசிதரன், ஆர்.சுப்பிரமணியம் ஆகியோர் முன்பு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

வைகோ நீதிமன்றில் ஆஜரானார். அப்போது மத்திய அரசு வழக்கறிஞர் வி.டி.பாலாஜி ஆஜராகி மனு ஒன்றை தாக்கல் செய்தார். அந்த மனுவில் 'விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடை செய்து பிறப்பித்த உத்தரவை எதிர்த்து வைகோ வழக்கு தொடர உரிமை இல்லை. இந்த உத்தரவை எதிர்த்து விடுதலைப்புலிகள் இயக்கம் தான் வழக்கு தொடர முடியும். எனவே, இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்' என்று கூறப்பட்டு இருந்தது.

இதையடுத்து இந்த வழக்கை எதிர் வரும் 14 ஆம் திகதிக்கு தள்ளி வைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

(கு)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியிலுள்ள அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று மதியம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்ட 30/1தீர்மானத்தை நடைமுறைப்படுத்த இலங்கை அரசுக்கு வழங்கிய இரண்டு வருட கால அவகாசம் எதிர்வரும் மார்ச் மாதத்துடன் நிறைவடைகின்றது. ஆகையால் ஒரு தீர்க்கமான முடிவொன்றைத் தமிழர் தரப்பு எடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது.

ஏனெனில் கடந்த 2012 ஆம் ஆண்டுமுதல் மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் குறித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தாலும் இதுவரை எந்தவித முன்னேற்றமும் இல்லாத நிலைமையே காணப்படுகின்றது.

அதிலும் பாதிக்கப்பட்ட தரப்புக்களின் குரல்களின் அடிப்படையில் நடவடிக்கைகள் அல்லது செயற்பாடுகள் அல்லது தீர்மானங்கள் எடுக்கப்படாமல் வல்லரசுகள் தங்கள் நாட்டு நலன்களின் அடிப்படையிலேயே இதனைத் தமக்குச் சார்பாகப் பயன்படுத்தி வந்திருக்கின்றன. இதனால் தமிழர் தரப்பினரான நாங்கள் நடுத்தெருவிலேயே நிற்கிறோம்.

எனவேதான் மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் கூட்டத்தொடருக்கு முன்னதாக நாங்கள் ஒரு தீர்மானத்தை எடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கப் போகின்றனர் என்பதை அந்தக் கட்சியின் பேச்சாளரான சுமந்திரனின் கருத்துக்களூடாக ஊடகங்கள் வெளிப்படுத்தியிருக்கின்றன.

கடந்த 2015 ஆம் ஆண்டு வெளிவந்த 200 பக்க அறிக்கையுடன் சர்வதேச விசாரணை முடிந்துவிட்டது என்றும் இனி மேலும் சர்வதேச விசாரணை என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் கூட்டமைப்பு கூறிவந்திருப்பதுடன் உள்ளக ரீதியான விசாரணைகளே முன்னெடுக்கப்படவேண்டுமென்றும் தெரிவித்தது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் நிறைவேற்றப்படும் தீர்மானத்தை இலங்கை அரசின் அனுமதியின்றி நடைமுறைப்படுத்த முடியாது என்றும் கூறிஅந்த கவுன்ஸில் பலவீனமான அமைப்பு என்பதையும் கூட்டமைப்பு ஒப்புக் கொண்டுள்ளது. ஆக, 2015 ஆம் ஆண்டு வெளிவந்த அறிக்கை என்பது கூட்டமைப்பினரின் கருத்துக்களின் அடிப்படையில் ஒரு மேற்பார்வையே தவிர விசாரணை அல்ல என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது.

இவ்வாறான நிலைமையில் சர்வதேச சமூகத்தின் பார்வை இலங்கை மீது இருக்குமே தவிர மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள், தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் மற்றும் அழிவுகள் தொடர்பில் எந்தவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படப் போவதில்லை. ஏனெனில் வல்லரசுகள் எல்லாம் தங்கள் நாட்டுநலன்களுக்காகவே தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகள், போர்க்குற்றங்களைப் பாவிப்பார்கள் என்பதையும் கூட்டமைப்பு ஒப்புக் கொண்டுள்ளது.

இதேவேளை, 2015 ஆம் ஆண்டு தேர்தலின்போது முழுமையான சர்வதேச விசாரணை வேண்டும் என்றும் அதற்கு மக்களே ஆணைதாருங்கள் என்றும் மக்களிடத்தில் கோரிய கூட்டமைப்பினர் அவ்வாறு ஆணை தந்தால் குற்றவாளிகளைத் தூக்குக்கு அனுப்புவோம் என்றும் கூறியிருந்தனர்.

ஆனால்தேர்தல்முடிவடைந்து இரண்டுவாரத்தின்பின்னர் 2015 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அந்த அறிக்கை வெளியாவதை தாமதிக்குமாறும், 30/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்த காலஅவகாசம் வழங்க வேண்டுமென்றும் ஜெனிவா சென்று கூட்டமைப்பு அரசுக்குச் சார்பாகக் கோரியிருந்தது.

ஆனாலும் அரசு தானாக எதனையும் செய்யப் போவதில்லைஎனத்தெரிந்தும்அரசிற்கு சார்பாகவே கூட்டமைப்பு செயற்பட்டதால் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும் போர்க் குற்றங்களுக்கும் சர்வதேச விசாரணை நடைபெறாமல் அது முடக்கப்பட்டிருந்தது. அதனை கூட்டமைப்பே முடக்கியிருந்ததால் அதற்கான முழுப் பொறுப்பையும் அவர்கள் தான் ஏற்கவேண்டும் – என்றார். (ஐ-7)

## தனது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியிலுள்ள அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று மதியம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு –

தமிழ் மக்கள் நலன் சார்ந்து கூட்டமைப்பு செயற்படவில்லை என்பதைக் கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் நாங்கள் கூறி வருகின்றோம். அதேபோன்றே முதலமைச்சர் விக்னேஸ்வரனும் தற்போது கூறி வருகின்றார். இவ்வாறு ஒரே நிலைப்பாட்டில் உள்ள இரண்டு தரப்புக்களும் இணையவேண்டுமென்பதற்காகவே முதலமைச்சரை எங்களுடன் சேர்ந்து பயணிக்குமாறு நாங்கள் அழைப்பு விடுக்கின்றோம்.

அவ்வாறு அவர் எங்கள் கட்சியில் வந்து இணைந்து கொள்ளலாம் அல்லது தனியான கட்சியொன்றை ஆரம்பித்தும் எங்களுடன் இணைந்து பயணிக்கலாம். ஆனால் இதுவரை காலமும் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்பட்ட தரப்பினரை உள்வாங்கியோ அல்லது அவர்களுடன் இணைந்து பயணிக்கவோ நாங்கள் தயாரில்லை.

அவ்வாறு ஏமாற்று அரசியல் செய்பவர்கள் நாங்கள் அல்லர். ஓர் இலக்கை நோக்கியதாகவே எங்களது பயணம் இருக்கிறது. அந்த இலக்கை நோக்கிய பயணித்துக்கே முதலமைச்சரையும் அழைக்கின்றோம். ஆகவே அவர் எம்முடன் வந்து சேர்ந்து கொள்வாரா அல்லது புதிய கட்சியைத் தொடங்கி எங்களுடன் இணைந்து பயணிக்கப் போகின்றாரா என்பதை அவரே அறிவிக்கவேண்டும்.

ஏனெனில் கடந்த உள்ளுராட்சிச் சபைத் தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எப். எங்களுடன் இணைந்து பயணிப்பதாகக் கூறிக் கொண்டு இறுதிநேரம் வரை தனியாகப் பயணிப்பதைத் தெரிவிக்காது அந்தக்கட்சியின்தலைவர் சுரேஷ் பிறேமச்சந் திரன் முதுகில் குத்தியிருந்தார். அதேபோன்று இனி வரும் காலங்களில் முதல்வரும் அவ்வாறு செயற்படக் கூடாது.

ஆகவே முதலமைச்சர் எங்களுடன் சேரமுடியாது எனில் அதனை வெளிப்படையாகக் கூறவேண்டும். ஆனாலும் நாங்களும் முதலமைச்சரும் தமிழ் மக்கள் பேரவையின் பொது அமைப்புக்களும் இணைந்து செயற்பட்டாலே சிறந்தது. அவ்வாறான ஒரு பயணமே இந்த இனத்திற்கு அவசியமானது – என்றார். (ஐ-7)

## மறைந்தார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாக அறிவிக்கப்பட்டது.

கடந்த11நாள்களாகச்சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள காவேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கருணாநிதியின் உடல்நிலை கடந்த இரண்டு நாள்களாக கவலைக்கிடமாக இருந்த நிலையில், தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி அவர் நேற்று உயிரிழந்தார்.

இரத்த அழுத்தக் குறைவு மற்றும் சிறுநீரகத் தொற்று காரணமாக, முதலில் வீட்டிலேயே சிகிச்சை பெற்று வந்த கருணாநிதி, பிறகு உடல்நிலை மோசமடைந்ததைத் தொடர்ந்து சென்னை காவேரி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

அவருக்கு மருத்துவர்கள் தீவிரசிகிச்சை அளித்து தொடர்ந்து கண்காணித்து வந்தனர். மருத்துவமனையில் இருந்த கருணாநிதியின் உடல்நிலை குறித்து விசாரிக்க, அரசியல் கட்சித் தலைவர்களும், சினிமா பிரபலங்களும் மத்திய, மாநில அமைச்சர்களும், நாட்டின் துணைக் குடியரசுத் தலைவர் வெங்கய்யா நாயுடு உள்ளிட்ட பலர் மருத்துவமனைக்கு வந்தனர்.

கருணாநிதியின் மரணம் குறித்து தகவல்கள் வெளியானமையை அடுத்து மருத்துவமனைப் பகுதியில் பொதுமக்களும் தி.மு.க. தொண்டர்களும் கண்ணீருடன் குவிந்தனர். தொண்டர்களைக் கட்டுப்படுத்த அதிகளவு பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

### குடும்பத்தினர் கதறல்

காவேரி வைத்தியசாலையில் இருந்து துர்க்கா ஸ்டாலின், செல்வி, மோகனா தமிழரசு உள்ளிட்ட கருணாநிதியின் குடும்பத்தினர் கண்ணீருடன் நேற்று மாலை கோபாலபுரம் சென்றனர்.

அப்போது வைத்தியசாலை வாயிலில் கண்ணீர் விட்டுக் கதறி அழுதனர். அழுதபடியே காரில் சென்ற அவர்கள் கோபாலபுரம் வீட்டிற்குச் சென்றனர். வீட்டில் நுழையும் போதும் அவர்கள் கதறியபடியே சென்றனர்.

### மோடி இரங்கல்

தமிழகத்தின் முன்னாள் முதல்வரும் தி.மு.க. தலைவருமான கருணாநிதி உயிரிழந்தமையை அடுத்து பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் மிகச்சிறந்த தலைவர்களில் ஒருவர் திமுக தலைவர் கருணாநிதி அவரது மறைவை கேட்டு துயரமடைந்தேன் என டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்திய குடியரசு தலைவர், தலைவர் ராம்நாத் கோவிந்த் இரங்கல் தெரிவித்துள்ளார்.

கருணாநிதிமறைவைஅறிந்து வேதனை அடைந்துள்ளேன் என குடியரசு தலைவர் தமிழில் பதிவிட்டுள்ளார். எனது ஆழ்ந்த இரங்கலை அவரது குடும்பத்தாருக்கும், மற்றும் கோடிக்கணக்கான மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

எழுத்துத் துறை, நாடகம், திரைப்பட வசன கர்த்தா எனப் பன்முக ஆளுமை கொண்டவர் கருணாநிதி. 1957 ஆம் ஆண்டு குளித்தலை தொகுதியில் முதல் முறையாகச் சட்டப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கருணாநிதி, 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற பேரவைத் தேர்தலில் திருவாரூர் தொகுதியில் வெற்றி பெற்றார். மொத்தம் 13 சட்டப் பேரவைத் தேர்தல்களில் போட்டி யிட்டுள்ள கருணாநிதி, ஒருமுறை கூடத் தோற்றமை கிடையாது. பல தடவை அமைச்சராகவும், 5 முறை முதல்வராகவும் பணியாற்றியவர் கருணாநிதி. என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மணிவண்ணனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்ததன் நோக்கம் என்ன? தாங்கள் விரும்பிய முடிவைக் கொழும்பில் தான் எடுக்கலாம் என்ற நம்பிக்கையிலா அந்த வழக்கு அங்கு தொடரப்பட்டது?

இவ்வாறு கேள்வி எழுப்பினார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

நேற்று நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

யாழ். மாநகர சபையின் உறுப்பினராக இருக்கும் எமது கட்சியின் தேசிய அமைப்பாளர் மணிவண்ணனுக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றமை அனைவருக்கும் தெரியும். எங்களைப் பொறுத்தவரை அந்த முடிவு சட்டத்தின் பிரகாரம் முழுமையாகக் கருதப்பட்டு எடுக்கப்பட்டதொரு முடிவல்ல.

அது சம்பந்தமாக நாங்கள் எங்கள் சட்டத்தரணிகளோடு பேசிக் கொண்டு வருகின்றோம். அந்தச் சட்டத்தரணிகள் சட்டத்தை ஆராய்ந்து சரியானதொரு முடிவை எடுக்கும் வரை நாங்கள் மேலதிகமாக இதில் சட்ட ரீதியாக முன்னெடுக்கவிருக்கும் செயற்பாடுகள் தொடர்பில் சொல்லமுடியாமலிருக்கிறது.

இடைக்காலத் தடை என்பது இனி இழுபட்டுக் கொண்டுபோவதற்கான வாய்ப்புக்கள் தான் அதிகம். இது எனது தனிப்பட்ட கருத்து. ஏனென்றால் கூட்டமைப்பின் சுமந்திரன் கொண்டுவந்த இந்த வழக்கைக் கொழும்பில் உள்ள மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யலாமென்பதுமட்டுமல்ல உண்மையிலேயே 13 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் யாழ்ப்பாணத்தில் உள்ள மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் தாக்கல் செய்திருக்கலாம்.

13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் அதிகாரத்தைப் பரவலாக்குதல் என்ற அடிப்படையில் கொழும்பிலே இருக்கக் கூடிய விடயத்தையும் தாண்டி மாகாணங்களிலும் அதனைச் செய்யலாம் என்பதற்காகக் கொழும்பில் உள்ள அதிகாரங்கள் மாகாண மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கும் வழங்கப்பட்டிருக்கின்றது. அந்த அடிப்படையில் இந்த வழக்கை யாழ்ப்பாணத்தில் தாக்கல் செய்திருக்கலாம்.

ஆனால் அந்தத் தெரிவு அவருக்கு இருக்கத் தக்கதாக கொழும்பில் அதனைத் தாக்கல் செய்திருக்கின்றார் என்றால் சுமந்திரனின் கருத்தின்படியும் கூட்டமைப்பின் கருத்தின்படியும் தாங்கள் விரும்பிய முடிவைக் கொழும்பில்தான் உறுதியாக எடுக்கலாம் என்பதே.

தான் பதவியை இராஜினாமாச் செய்து எங்கள் அணியில் இருக்கும் அடுத்த முக்கியமான உறுப்பினர் ஒருவரை நியமிக்குமாறு மணிவண்ணன் எங்களிடம் கேட்டிருக்கிறார்.

மணிவண்ணணுக்கென்று அவருடைய நம்பிக்கையிலேயே கணிசமான மக்கள் ஏனைய எமது வேட்பாளர்களுக்கும் வாக்களித்திருக்கின்றனர். ஆகவே மணிவண்ணனின் விருப்பத்தை முழுமையாக நாங்கள் மதிக்கிறோம்.

ஆனால் சட்ட ரீதியாக – ஜனநாயக ரீதியாக எங்கள் மக்கள் மணிவண்ணண் என்ற தனிநபருக்குக் கொடுத்திருக்கும் விசுவாசத்தை கிடைத்திருக்கும் முதற் சந்தர்ப்பத்தில் உதாசீனம் செய்யும் வகையில் இராஜினாமா செய்வது பொருத்தமல்ல என்பது தான் எங்களுடைய கருத்து. ஆகவே எம்மைப் பொறுத்தவரை நாங்கள் இந்த வழக்கில் கொழும்பில் வாதாடி முடிவை எடுக்க முயற்சிப்போம். அவை அனைத்தையும் எங்கள் சட்டத்தரணிகளுடன் பேசியே பின்னர் ஒரு முடிவை அறிவிப்போம் – என்றார். (ஐ-7)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செவ்வாய்க்கிழமை முதல் சில தினங்களுக்குப் பலமான காற்று வீசும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கு, வட மத்திய, ஊவா, சப்ரகமுவ, தெற்கு மாகாணங்கள் மற்றும் குருணாகல் ஆகிய பிரதேசங்களின் காற்றின் வேகம் மணிக்கு 50 கிலோ மீற்றராக இருக்கும்.

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் 50 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி உண்டு என்று வளிமண்டலவியல்திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

## உயர்மட்டக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் மற்றும் அமைச்சர் மட்டத்தில் நடைபெறவுள்ள சந்திப்பில் மீனவர்கள் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளப்போவதில்லை என முல்லைத்தீவு மீனவர்கள் சம்மேளனத்தின் பிரிதிநிதிகள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் தடை செய்யப்பட்ட மற்றும் அனுமதியற்ற கடற்தொழிலால் தமது வாழ்வாதாரத் தொழில் முழுமையாகப் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்து முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் கடந்த 2ஆம் திகதி கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்திணைக்கள அலுவலகத்தை முற்றுகையிட்டுத் தொடர்ந்து கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடற்தொழில் மற்றும் நீரியல் வளத்திணைக்களத்தின் பணிப்பாளர் இனிகே ஜனக பிரசன்ன குமாரவினால் இன்று புதன் கிழமை எதிர்க்கட்சித்தலைவர் இரா. சம்பந்தன், கடற்தொழில் நீரியல் வளங்கள் அமைச்சர் விஜித விஜயமுனி சொய்சா ஆகியோரின் பங்குபற்றுதலுடன் அமைச்சில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் பங்கேற்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், எதிர்வரும் 12ஆம் திகதி அமைச்சர் தலைமையிலான குழுவினர் முல்லைத்தீவுக்கு நேரடியாக வருகைதருவர் எனத் தெரிவித்துள்ள நிலையில், அன்றைய தினம் தங்களின் நிலைப்பாடுகள் தொடர்பில் எடுத்துக் கூறவுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், இன்று நடைபெறவுள்ள கலந்துரையாடலில் பங்கேற்கப்போவதில்லை என முல்லைத்தீவு மீனவர்கள் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (ஐ)

## எதிர்க்கட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவி தொடர்பான சர்ச்சை நீடித்து வந்த நிலையில் நேற்றைய நாடாளுமன்ற அமர்வில் கூட்டு எதிரணியினருக்கும், அரச தரப்பினருக்கும், பிரதான எதிர்க்கட்சியினருக்கும் இடையில் கடும் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

இதனால் சபை அமர்வைத் தற்காலிகமாக ஒத்திவைத்த சபாநாயகர் கட்சித் தலைவர்கள் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்தார்.

இதனையடுத்து கூட்டப்பட்ட விசேட கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பில் அடுத்த நாடாளுமன்ற அமர்வில் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றம் மீண்டும் இன்று கூடவுள்ள நிலையில் இது தொடர்பான அறிவிப்பும் இன்று வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

# பார்சிலோனா அணியில் இணைந்தார் ஆர்டுரோ விடல்

உலகில் அதிக இரசிகர்கள் வட்டாரத்தைக் கொண்ட விளையாட்டான உதைபந்து விளையாட்டில், கழக அணிகளுக்கிடையில் நடத்தப்படும் உதைபந்துத் தொடர்களுக்கு மவுசு அதிகம்.

இதனால் உலகில் உள்ள முன்னணி வீரர்களை, பிரபல கால்பந்து கழகங்கள் போட்டி போட்டுக்கொண்டு வாங்குகின்றன.

இந்நிலையில் சிலி உதைபந்து அணியின் மத்திய கள வீரரான ஆர்டுரோ விடலை, ஸ்பெயினின் முன்னணி கழக அணியான பார்சிலோனா வாங்கியுள்ளது.

31 வயதான ஆர்டுரோ விடல், அந்த அணிக்காக மூன்று ஆண்டு கால ஒப்பந்தத்தில், விளையாட கைச்சாத்திட்டுள்ளார். அவர் 21 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

அவரை அணியில் உத்தியோகபூர்வமாக இணைத்துக் கொள்வதற்கு முன்னதாக மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்வது அவசியம்.

அதன் அடிப்படையில் தற்போது அவருக்கு மருத்துவச் சோதனைகளும் இடம்பெற்றுள்ளன. அதில் அவர்




உடற்தகுதியுடன் இருக்கிறார் என நிரூபித்துள்ளார்.

இந்த மூன்று ஆண்டு கால ஒப்பந்தத்தில், பார்சிலோனா அணிக்காக மூன்று முறை சம்பியன்ஸ் கிண்ணத்தை பெற்றுக் கொடுக்க விரும்புகிறேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னதாக ஜேர்மனியின் கழக அணியான பேயர்ன் முனிச் அணிக்காக விளையாடிவந்த ஆர்டுரோ விடல், அந்த அணிக்காக 79 போட்டிகளில் விளையாடி 14 கோல்களை அடித்துள்ளார்.

இது இதுதவிர 2011ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரை ஜுவண்டஸ் அணிக்காக ஆர்டுரோ விடல் விளையாடி, 124 போட்டிகளில் 35 கோல்கள் அடித்துள்ளார்.

அத்தோடு, 2012 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் ஜுவண்டஸ் அணி, சீரி ஏ கிண்ணத்தை வெற்றிக் கொள்வதற்கும் ஆர்டுரோ விடல் துணை நின்றார்.

மேலும், சிலி உதைபந்து அணிக்காக 100 போட்டிகளில் விளையாடி 24 கோல்கள் அடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் மலிங்க?




இலங்கை அணியின் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க எமது அவதானிப்பில்தான் இருக்கிறார் என்று இலங்கையின் துடுப்பாட்டப் பயிற்சியாளர் திலான் சமரவீர தெரிவித்துள்ளார்.

ஆனால் அவர் எதிர்வரும் போட்டிகளில் விளையாடுவாரா, இல்லையா என்பதை நான் தீர்மானிக்க முடியாது என்றும் அநேகமாக தென்னாபிரிக்காவுக்கு எதிரான இருபதுக்கு 20 போட்டியில் லசித் மலிங்க களமிறங்க வாய்ப்புள்ளதாகவும் திலான் சமரவீர குறிப்பிட்டார்.

நட்சத்திர வேகப்பந்து வீச்சாளரான லசித் மலிங்க அணியிலிருந்து கடந்த சில காலங்களாக ஓரம் கட்டப்பட்டே வருகிறார்.

ஆனாலும் அவரும் சளைக்காமல் தன் திறமைகளை உள்ளூர்ப் போட்டிகளில் காட்டி வருகிறார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடரை இலங்கை அணி இழந்துள்ள நிலையில் லசித் மலிங்க போன்ற அனுபவ வீரர்களின் அவசியம் இப்போதுதான் உணரப்பட்டிருக்கிறது.

## இங்கிலாந்து அணியில் ஒலி போப்

இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது டெஸ்டுக்கான இங்கிலாந்துக் குழாம் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த குழாமில் இளம் துடுப்பாட்ட வீரர் ஒலி போப் இடம்பெற்றுள்ளார்.

முதலாவது டெஸ்டுக்கான இங்கிலாந்துக் குழாமில் இடம்பெற்றிருந்த டேவிட் மலனை போப் பிரதியீடு செய்வதோடு, நேற்று முதல் தனது வழக்கு விசாரணைகளை எதிர்கொள்ளும் பென் ஸ்டோக்ஸை கிறிஸ் வோக்ஸ் இரண்டாவது டெஸ்டுக்கான இங்கிலாந்துக் குழாமில் பிரதியீடு செய்துள்ளார்.

முதலாவது டெஸ்டுக்கான குழாமில் இடம்பெற்றிருந்து போட்டியில் விளையாடியிருக்காத மொயின் அலி, ஜேமி போர்ட்டன் உட்பட முதலாவது டெஸ்டில் விளையாடிய ஏனைய வீரர்கள் அனைவரும் இரண்டாவது டெஸ்டுக்கான குழாமில் இடம்பெற்றுள்ளனர்.




## ஜேர்மனியின் கோமஸ் ஓய்வு




ஜேர்மனி உதைபந்து அணியின் மூத்த வீரரான மரியோ கோமஸ் சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். பிரேசிலில் கடந்த 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண உதைபந்து தொடரில் ஜேர்மனி சம்பியன் பட்டத்தை வென்றது.

மேலும் ரஷ்யாவில் நடைபெற்ற உலகக்கிண்ண உதைபந்து தொடரில், ஜேர்மனி அணியில் மரியோ கோமஸ் இடம்பிடித்திருந்தார். இவருடன் பல முன்னணி அனுபவ வீரர்கள் இடம்பிடித்திருந்தனர்.

உலகக்கிண்ணத்தை வெல்லும் அணிகளில் ஒன்றாக ஜேர்மனி கருதப்பட்டது இருப்பினும் லீக் சுற்றோடு வெளியேறிய ரசிகர்களுக்கு பெரும் அதிர்ச்சியை கொடுத்தது ஜேர்மனி. இதனால் அந்த அணி மீது கடும் விமர்சனம் எழுப்பப்பட்டது.

இந்நிலையில் 33 வயதாக மரியோ கோமஸூம் ஓய்வு பெற்றுள்ளார். கடந்த 2007 ஆம் ஆண்டில் இருந்து ஜேர்மனி அணிக்காக விளையாடி வந்த கோமஸ், 78 போட்டிகளில் விளையாடி 31 கோல் அடித்துள்ளார்.

தனது ஓய்வு குறித்து பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டுள்ள கோமஸ், "தற்போது நான் ஓய்வு முடிவை அறிவிக்கும் நேரமாகும். இது திறமையுள்ள ஏராளமான இளைஞர்களுக்கு, அவர்களுடைய கனவை நனவாக்க வாய்ப்பாக அமையும்" என்றார்.



## வெளியேறுகிறார் டுபிளஸ்ஸிஸ்

தென்னாபிரிக்க அணித் தலைவர் டுபிளஸ்ஸிஸியின் வலது தோள்பட்டையில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக அவர் இலங்கைக்கு எதிரான இறுதி இரு ஒரு நாள் போட்டிகளிலும் ஒரு இருபதுக்கு 20 போட்டிகளிலும் விளையாடமாட்டார் என தென்னாபிரிக்க அணியின் முகாமையாளர் மெஹமட் முசாஜி தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இலங்கைக்கு எதிரான மூன்றாவது போட்டியின் போது தென்னாபிரிக்க அணி வீசிய 10 ஓவரில் பிடியெடுப்பு ஒன்றுக்கான முயற்சியொன்றை மேற்கொண்டபோது அவர் கீழே வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் வலது தோள்பட்டை பாதிப்புக்குள்ளானது.

இதனையடுத்து அவருக்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவ சிகிச்சைகளுக்குப் பின்னர் மருத்துவர்கள் அவரை ஆறு வாரங்களுக்கு முழுமையாக ஓய்வு பெறுமாறு அறிவித்துள்ளனர். இதன் காரணமாகவே அவர் இலங்கைக்கு எதிராக மீதமுள்ள இரு ஒருநாள் போட்டிகள் மற்றும் ஒரு இருபதுக்கு 20 போட்டிகளில் விளையாட முடியாது போயுள்ளது.

இந் நிலையில் மீதமுள்ள இரண்டு ஒருநாள் போட்டிகள் மற்றும் ஒரு இருபதுக்கு 20 போட்டிகளுக்கு தென்னாபிரிக்க அணியின் அணித்தவைர்களாக டீகொக், ஹஸிம் அம்லா மற்றும் மார்க்ரம் ஆகியோரில் ஒருவர் நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கடந்த ஆட்சியில் ஜனநாயகம் இருந்ததை நிரூபிக்க முடியுமா?



## பிரதியமைச்சர் அஜித் பெரேரா கேள்வி

**கொழும்பு, ஓகஸ்ட் 08**

**தேசிய அரசில் ஜனநாயகம் இல்லை என்று குற்றம் சுமத்துபவர்கள் கடந்த அரசில் ஜனநாயகம் எவ்வாறு காணப்பட்டது என்ற உண்மைகளை மக்களுக்கு நிரூபிக்க முடியுமா? என மின்வலு புத்தாக்க பிரதியமைச்சர் அஜித் பி.பெரேரா கேள்வி எழுப்பியுள்ளார்.**

**ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஊழல்வாதிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டனை பெற்றுத் தருவதாகக் குறிப்பிட்டே தேசிய அரசு ஆட்சிக்கு வந்தது. ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல்களில் இதுவே எமது கொள்கை பிரசாரமா கக் காணப்பட்டது. மக்களும் இவ்விடயத்தை எதிர்பார்த்தே தேசிய அரசைத் தோற்றுவித்தனர். ஆனால் தற்போது அரசின் நோக்கம் திசைமாறிவிட்டதாகக் குற்றம் சுமத்து கின்றனர்.

எமது ஆட்சியில் ஜனநாயகம் அழிக்கப்படுகின்றது என்று குற்றம் சாட்டுபவர்கள் கடந்த அரசில் எவ்வாறான ஜனநாயகம் காணப்பட்டது என்று பகிரங்கமாக ஒப்பிட முடியுமா?

ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் அனைத்து தாபனங்களும் இன்று சுயாதீனமாகவேச் செயற்படுகின்றன. ஊழல்வாதிகளைத் தண்டிப்பதாகக் கூறிய அரசு ஏன் இன்னும் அவ்வாறு செயற்படவில்லை என்று மக்கள் மத்தியில் உள்ள கேள்விக்கு விரைவில் பதில் கிடைக்கும் – என்றார். (ஐ)

**கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிரயோக விஞ்ஞான பீடத்துக்கான புதிய கட்டடத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், உயர் கல்வி மற்றும் கலாசார அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம உட்படப் பலர் பங்கேற்றனர். (ஐ)**



# ஜனநாயக சீர்திருத்தங்களை மேம்படுத்த சுவிஸ் ஆதரவு

கொழும்பு, ஓக.08

ஜனநாயகச் சீர்திருத்தங்களை மேம்படுத்துவதற்கு இலங்கைக்கு வழங்கி வரும் ஆதரவை அதிகரிப்பதற்குச் சுவிற்ஸர்லாந்து திட்டமிட்டிருப்பதாக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் அந் நாட்டின் நீதியமைச்சர் சிமொனெட்டா சொமருகா தெரிவித்தார் என்று நீதியமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையுடனான குடிப்பெயர்வு ஒத்துழைப்பு உடன்படிக்கையை விரிவுபடுத்துவதற்கும் அவர் இணங்கியிருக்கிறார். இது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்துறை அமைச்சர் எஸ்.பி.நாவின்னவுடன் அவர் நேற்றுக் கைச்சாத்திட்டார்.

மனித உரிமைகளை வலுப்படுத்துவதற்கான ஈடுபாட்டை அதிகரிப்பதற்கும், தொழிற்பயிற்சித் திட்டங்களூடாக இலங்கையில் இளைஞர், யுவதிகளுக்கான சிறந்த வாய்ப்புக்களை உருவாக்குவதற்குமான நிபந்தனைகளை வகுப்பதாக இந்தக் குடிப்பெயர்வு ஒத்துழைப்பு செயற்பாடுகள் அமைகின்றன என்று சொமருகா தெரிவித்தார். (ஐ)

# சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயன்றோர் மறியலில்

கொழும்பு, ஓக.08

சிலாபம் கடல் ஊடாகப் படகுகளில் சட்டவிரோதமாக வெளிநாட்டுக்குச் செல்ல முயற்சித்தபோது கைதுசெய்யப்பட்ட 21 பேரையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சிலாபத்திலிருந்து 117 கடல் மைல் தூரத்தில் வைத்து இவர்களை கைதுசெய்த கடற்படையினர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுக்கும் நோக்கத்தில் இலங்கைக் கடற்படையின் மேற்குப் பிரிவில் பாதுகாப்புக் கடமையில் இருந்தவர்களால் கடந்த 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சந்தேகத்தின் பேரில் இலங்கையர்கள் 21 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களை நேற்று சிலாபம் பொலிஸார் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

# ஜனநாயகக் கட்டமைப்பை மீறி வருகின்றார் சபாநாயகர்

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு



கொழும்பு, ஓக.08

நாடாளுமன்றத்தின் ஜனநாயகக் கட்டமைப்புகள் மீறப்பட்டுள்ளதாகக் கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடாளுமன்றின் ஜனநாயகக் கட்டமைப்புகள் முழுமையாக மீறப்பட்டுள்ளன. 16 பேர் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

6 பேர் கொண்ட மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிர்க்கட்சி கொறடா பதவி வழங்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றில் பெரும்பான்மை கொண்ட எமக்கே எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்படவேண்டும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரின் கருத்தை நாம் எதிர்பார்த்துள்ளதாகக் கூறுகின்றனர். எமக்குச் சபாநாயகரின் பதிலே வேண்டும்.

சபாநாயகருக்கு ஒன்றைக் குறிப்பிடுன்றோம். அரசியல் கட்சிகளுக்கு அடிபணியாமல் நடுநிலையாக எமக்கு ஒரு பதிலை வழங்குங்கள்.

சபாநாயகர் குறித்து எமது மனதில் ஒரு நிலைப்பாடு இருந்தது. அண்மைக்காலமாக அது குறைவடைந்து வருகின்றது. அதனை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில் செயற்படாமல் எமக்கு உரிய தீர்ப்பு வழங்கவேண்டும்.

நாடாளுமன்றத்தைப்போலவே கொழும்பு மாநகர சபையிலும் காணப்படுகின்றது. கொழும்பு மாநகரசபையின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை அரசு எடுத்துக்கொள்ள முயற்சிக்கின்றது – என்றார். (ஐ)

# சபாநாயகரின் செயற்பாடு; மஹிந்த அணி அதிருப்தி!



கொழும்பு, ஓக.08

சபாநாயகர் கருஜயசூரியவின் செயற்பாடானது எதிர்க்கட்சியின் வகிபாகத்தை மீறும் ஒன்றாகவே அமைந்துள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தலைவர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மத்திய வங்கிப் பிணைமுறி மோசடி, சிங்கப்பூர் ஒப்பந்தம் என நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் தற்போது ஏற்பட்டுள்ளன.

ஆனால், இவற்றை நாடாளுமன்றில் விவாதிப்பதில் பாரிய சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. அதாவது, பிரதான எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கூட்டு எதிரணி உறுப்பினர் ஒருவருக்கு வழங்கக் கூடாது, முடியாது எனச் சபாநாயகர் கருஜயசூரிய உறுதியாகத் தீர்மானித்துள்ளார்.

அதேநேரம், இந்தப் பதவியை ஒருங்கிணைந்த எதிரணியான எமக்கு வழங்கலாமா அல்லது சம்பந்தனிடமே இருக்கலாமா என்பதற்கான ஆலோசனையை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரிடம் சபாநாயகர் கேட்டுள்ளார்.

சபாநாயகர் கருஜயசூரியவின் இந்தச் செயற்பாடானது, எதிர்க்கட்சிகளின் குரலை ஒடுக்கும் ஒரு செயற்பாடாகவே காணப்படுகிறது. அரசின் பிழைகள் அனைத்தும் எதிர்க்கட்சி வாயிலாகவே மக்களுக்குத் தெரியவரும் நிலையில், இது எதிர்க்கட்சிகளின் உரிமையை இல்லாதொழிக்கும் ஒன்றாகவும் காணப்படுகிறது.

அத்தோடு, நாடாளுமன்றின் செயற்பாடுகள், உறுப்பினர்களின் சம்பள விவகாரம், எதிர்க்கட்சிகளின் உரிமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் சபாநாயகர் நாடாளுமன்றின் செயலாளரிடம் ஆலோசனை பெற்றுள்ள விடயமும் ஏற்புடையதல்ல.

நாடாளுமன்றின் ஒழுங்குகளைச் சபாநாயகர் பாதுகாக்கவேண்டுமே ஒழிய, நாடாளுமன்றின் பொதுச்செயலாளர் அல்லர். நாடாளுமன்றின் செயலாளருக்கு உறுப்பினர்களின் சம்பளத்தையெல் லாம் நிர்ணயிக்க எந்தவொரு அதிகாரமும் இல்லை.

தனக்கான அதிகாரத்தையெல்லாம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளருக்கும், நாடாளுமன்றின் செயலாளருக்கும் வழங்கிச் சபாநாயகர் செயலிழந்த நிலைமையிலேயே காணப்படுகிறார் – என்றார். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.08.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.